# குடும்ப நலச் செய்திக் கதிர்


மலர் - 9 இதழ் - 8

ஆகஸ்ட் - 1979


JL
Y:52:5m911,N71
N79.9.5
159883


256
குரும்பலச்
செய்திக்கதிர்

# டேனிடா கருத்தரங்கு







தமிழ் நாட்டில் 'டேனிடா' திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படவிருக்கும் நல்வாழ்வு, மருத்துவ, குடும்பநலத் திட்டங்கள் குறித்த கருத்தரங்கம், உதக மண்டலத்தில் மே இரண்டாவது வாரத்தில் நடைபெற்றது. நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராசன் அவர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டார்.





# ஊரும்-பாரும்

## நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. ஆர். சௌந்தரராசன்

[குடும்ப நல மும்மாத நிறைவு விழா திருச்சி மாவட்டம் ஆளவந்தநல்லூரில் நடந்த போது அதில் கலந்து கொண்ட மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தர ராசன் அவர்கள் ஆற்றிய உரை.]

ஆளவந்தநல்லூரில் குடும்ப நல மும்மாத நிறைவு விழாவினைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாட வேண்டுமென்ற எண்ணம் வந்ததற்குக் காரணம், அரசாங்கத்தினுடைய அடிப்படைத் திட்டங்களானாலும் சரி—விழாக்களானாலும் சரி, அடித்தள மக்கள் வாழ்கின்ற கிராமப்புறங்களிலே நடத்தப்பட வேண்டும்.

திட்டத்திற்காகச் செய்யப்படுகின்ற விளம்பரத்தால் பெறுகின்ற பொழுது போக்கு அம்சங்களை நகர்ப்புறத்திலே இருக்கின்ற மக்கள் மட்டும் நுகர்வது என்பது போதாது. இந்த நாட்டினுடைய பெரும்பான்மையானவர்கள், கிராமப் புறத்திலே இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்துதான், தமிழகத்தினுடைய ஆட்சிப் பொறுப்பிலே முதலமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள், இன்றைக்கு இத்தகைய விழாக்கள் கிராமப்புறங்களிலே நடத்தப்பட வேண்டும் எனக் கருதுகிறார். அவரது எண்ணத்திற்கு ஒப்பவும், இந்த நாட்டினுடைய விடுதலைக்காகப்பாடு பட்ட உலகப் பெரியார் காந்தியார் அவர்கள், 'கிராம ராஜ்யம் மலர்ந்தால்தான், ராமராஜ்யம் மலரும்', என சொன்னதற்கு ஏற்பவும், இன்றைய தமிழக அரசு செயல்பட்டு வருகிறது. அந்தக் கிராமப்புறமக்களின் நல்ல நேரங்கள் பயனுள்ள வகையில் பயன் படுத்தப் பட்டாக வேண்டும் என்பதற்காக இத்தகைய விழாக்கள் கிராமப் புறங்களில் நடத்தப்படுகின்றன.

நான் இங்கே வந்தவுடன் தமிழக அரசு குடும்ப நலத் துறையின் விளம்பரப்பிரிவு துணை இயக்குநராக இருக்கின்ற திரு. நாமதேவன் அவர்களும், அவருடன் சென்னையிலிருந்து வந்துள்ள அப்பர் சுந்தரம் அவர்களும், முத்துராமலிங்கம் அவர்களும், மெய்யப்பன் அவர்களும், இன்னும் விளம்பரத் துறையில் பணியாற்றுகின்றவர்களும் என்னிடத்திலே சொன்னது இதுதான். 'முதன் முதலில் திருச்சியிலே விழா நடத்தலாம் என எங்களிடம் சொன்ன போது நாங்கள் சரி என்று சொன்னோம். ஆனால் இங்கே வந்து விழா நடக்கும் இடத்தைப் பார்த்ததற்குப் பின்னாலே இந்த இடத்திலா விழா (?) என்று நினைத்தோம். ஆனால் இன்றைக்கு விழாவைப் பார்க்கின்ற நேரத்தில், இனிமேல் இது போன்ற விழாக்களை இப்படிப்பட்ட இடங்களிலே தான் நடத்த வேண்டுமென்ற உணர்வு எங்களுடைய உள்ளத்தில் இடம் பெற்றிருக்கிறது', என்பதை அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

பாரதி பாடிய விழாச் சூழல் எனக்கு நினைவுக்கு வருகிறது.

காணி நிலம் வேண்டும்
பத்துப் பன்னிரண்டு தென்னை மரங்கள் வேண்டும்
அங்கோர் பத்தினிப் பெண்ணும் வேண்டும்

என்று சொல்லி, கிராமப்புறச் சூழ் நிலையைத்தான் சொன்னானே தவிர, ஒரு பெரிய சினிமாக் கொட்டகை வேண்டும்—அதற்கு பக்கத்திலே பெரிய பங்களா வேண்டும்—அதன் பக்கத்தில் தண்ணீர் போகாத சாக்கடை வேண்டும்—கொசுத் தொல்லை வேண்டுமென்று பாரதி பாடவில்லை. ஆகவே பாரதியார் எந்தக்கிராமத்துக்கு—எந்தக் கிராமப்புற வாழ்வுக்கு தன் கவிதையை—தன்னுடைய கவிதை உள்ளத்தைச் செலவழித்தாரோ அந்தக் கிராமப் புறம் வாழ்வுற வேண்டும். அந்தக் கிராமப் புறம் சிறந்தாக வேண்டும். கிராமப்புற மக்களு



டைய வாழ்க்கைத்தரம் உயர்ந்தாக வேண்டும். கூனிக் குறுகிக் குன்றி இருக்கிறாளே—வளர்ந்து வளைந்து தரையை நோக்கி நிற்கும் நெற்கதிர்களை அறுத்து, என்னுடைய நெற்றி வியர்வைதான் இந்த நெல்மணிகள் என்று சொல்லி, உங்கள் பசி போக்கத் தருகிறேன் என்று சொல்லி, நகர்ப்புறத்திலே வாழ்கின்றவர்களின் வயிற்றை நிரப்ப அனுப்பிவிட்டு, தன் வயிற்றை அரை வயிறாக்கிக் கொள்ளும்—கிராமப்புறத்தில் வாழும் உழைக்கும் காங்களது சொந்தக்காரர்களுக்கு மரியாதை ஏற்பட வேண்டும். அவர்களுடைய நீண்ட நாள் கனவு நினைவாக வேண்டும். அதுதான் இன்றைய தமிழகத்து முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களது எண்ணம் என்பதைத்தான் கிராமப்புறத்திலே நடுக்கப் பட்டிருக்கும் இந்த விழா எடுத்துக்காட்டிக் கொண்டிருக் கிறது.

159883

குடும்ப நலத் திட்டத்தைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய அருமைச் சகோதரி மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் மிக அழகாகச் சொன்னார்கள். நான் அவர்களை இந்த விழாவிற்கு அழைத்ததற்குக் காரணமே ஒரு ஆண் குடும்ப நலத்தைப் பற்றிச் சொல்லுவதைவிட, குடும்பத்தினுடைய விளக்காக இருக்கின்ற பெண் சொல்லுவது சாலப் பொருத்தமாக இருக்கும் என்பதற்காகத் தான் என்பதைத் தெரிவித்தாக வேண்டும். இன்றைக்கு அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கின்ற துறை கைத்தறித் துறை. அந்தக் கைத்தறி பற்றிக் கேட்டால் சொல்லுவார்கள். ஒரு கைத்தறித் துணி புடவையாக இருந்தாலும் சரி—வேட்டியாக அல்லது துண்டாக இருந்தாலும் சரி அது நெய்யப்பட வேண்டுமானால் இழை இரண்டு தான், ஒன்று ஊடு, இன்னொன்று பாவு. ஆக ஊடும் பாவும் நெருங்கி நல்ல விதத்திலே நெய்யப்படுமானால் அந்தத் துணி உறுதி வாய்ந்ததாக இருக்கும். ஆகவே இரண்டு இருக்கின்ற காரணத்தினாலேதான்—இரண்டு இழை ஓடுகின்ற காரணத்தினாலேதான் அந்தக் கைத்தறித் துணி வலிமைமிக்கதாக இருக்கிறது. ஆகவே அங்கே எப்படி இரண்டோ, அப்படிக் குடும்பம் என்பதற்கும் இரண்டு தான் தேவை என்பதை எடுத்துச் சொல்லுகின்ற விழா தான் இந்த விழா!

## நல்ல நல்ல பிள்ளைகள்!

குழந்தை பெற வேண்டாம் எனச் சொல்லுவதாக யாரும் எண்ணிவிட வேண்டாம். பிறக்கின்ற குழந்தைகள் எப்படி இருக்க வேண்டுமென்று புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களே சொல்லியிருக்கின்றார்கள்.

"நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி
இந்த நாடே இருக்குது தம்பி!"

என்று தான் பாடினார். ஆகவே அந்த நல்ல நல்ல பிள்ளைகள் என்பதற்கு ஆழமான பொருள் என்னவென ஆய்ந்தால், குடும்ப நலத் திட்டத்தின் அவசியம் புரியும். நோஞ்சானாக இருந்தால் அது நல்ல பிள்ளையா? மூன்று வயதிலேயே கண் தெரியாவிட்டால் நல்ல பிள்ளையா? ஐந்து வயதிலேயே 'லொக்கு லொக்கென்று' இருமினால் நல்ல பிள்ளையா? ஆக நல்ல பிள்ளை என்று சொன்னால் நல்ல திடகாத்திரமான உடம்பு உள்ள பிள்ளை—வலுவான பிள்ளை என்று பொருள். எட்டு வயதிலேயே கிருஷ்ணனைப் போல பிள்ளை இருக்க வேண்டும். கம்சனைப் போய் எட்டு வயதிலேயே கண்ணன் கொன்றான் என்றால் காரணம் என்ன? கண்ணனும், பலராமனும் இரண்டே பேர் தான் பிள்ளைகள். அதனாலே தான் வெண்ணெயாகத்தின்று



சென்னை மாநகராட்சி நடத்திய குடும்பநல முகாமில் நல் வாழ்வுத்துறை அமைச்சர், திரு. ஆர். சௌந்தரராசன் அவர்கள் உரையாற்றுகிறார்.

179-9.5

கண்ணன் பெருத்தான். அவர்கள் குடும்பத்தில் பத்துப் பிள்ளைகள் இருந்திருந்தால், வெண்ணெய் கிடைக்காது. வெண்ணெய்க்குப் பதிலாக வேறு ஏதாவது மண்ணைத் தூக்கிக் கைகளில் கொடுத்திருப்பார்கள். ஆகவே குறைந்த குழந்தைகளைப் பெற்றுக் கொண்டால் நிறைந்த இன்பத்தோடுமட்டுமல்ல—நிறைந்த வலுவோடு மட்டுமல்ல—நிறைந்த வளத்தோடு மட்டுமல்ல, நிறைந்த பாதுகாப்போடு அந்தக் குழந்தைகளை நாம் வளர்க்க முடியும்.

ஒரு குழந்தைக்கும் இன்னொரு குழந்தைக்கும் இடையிலே இடைவெளி வேண்டும். இதைக்குடும்ப நலத் துறை சொல்லுகிறது. குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டாம்—குறைந்த அளவு குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லுகிறீர்களே, அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டான இந்த ஆண்டில் அப்படிப் பேசலாமா என்று சிலர் கேட்கிறார்கள். உலகக் குழந்தைகள் ஆண்டு என எதற்காகப் பெயர் வைத்துள்ளார்கள் தெரியுமா? குழந்தைகளை வலுவோடு, சீக்கில்லாமல், நல்ல எதிர் காலத்திற்கு நம்பிக்கைதருகின்ற வைரம் பாய்ந்த உடம்போடு அந்தக் குழந்தைகளை உருவாக்க வேண்டும் என்பதற்காகத் தான் உலகக் குழந்தைகள் ஆண்டாக இந்த ஆண்டைக் கொண்டாடுகிறோம். குழந்தைகள் ஆண்டில் தான் குடும்ப நலத் திட்டத்திற்கு அதிகமான வேலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## குழந்தைகள் எப்படி இன்று இருக்கிறார்கள்?

இன்றைக்கு நம் நாட்டில் பிறக்கின்ற குழந்தைகள் எப்படி இருக்கின்றன என்று கேட்டால் ஒவ்வொரு குழந்தைக்கும், ஒவ்வொரு சீக்கு. காரணம் என்ன? நம் வீட்டில் எல்லோரும் பெருமை பேசுவார்கள். எங்க வீட்டிலே கட்டின தொட்டியை நாங்கள் அவிழ்ப்பதே இல்லை. தொட்டியிலிருந்து பிள்ளை இறங்கியதும் அடுத்த பிள்ளை தொட்டிக்குப் போகும். இப்படிப் பெருமை பேசுவார்கள். சில பேர் கிராமத்தில் பேசும் போது சொல்லுவார்கள், 'நமக்கு அதெல்லாம் கவலையே கிடையாது. வருஷம் போனாலும் போகுமே தவிர, பிள்ளை பெறுவது தவறாது.' என்பார்கள். அதில் ஒரு பெருமை அந்தக் காலத்திலே இருந்தது. இப்போது அப்படியில்லை. என் வீட்டில் இரண்டே பிள்ளைகள் என்று சொல்லிக் கொள்வதிலே தான் பெருமையிருக்கிறது. அதிகமான பிள்ளை என்றால் என்ன செய்ய முடியும்?

இன்றைக்குத் தாய்மார்களே நினைக்க ஆரம்பித்து விட்டார்கள். திருவிழாக்களுக்குச் செல்லும் தாய்மார்களுக்கு இரண்டே பிள்ளைகள் என்றால் கேட்பதை எல்லாம் வாங்கித் தருவார்கள். அதிகப் பிள்ளைகள் என்றால் அம்மா ஒரு பக்கமும், அப்பா ஒரு பக்கமும் பார்ப்பார்கள்.

## ஆண்டவனா கொடுக்கிறான்?

சில பேரைப் பார்த்து ஏன் இப்படி அதிகம் பெற்றுக் கொண்டே போகிறாய் என்றால், நான் என்ன செய்வது, ஆண்டவன் கொடுக்கிறான் என்கிறார்கள். ஆண்டவனா கொடுக்கிறான்? நன்றாக நினைத்துப் பாருங்கள். நீ சும்மா இருந்தால் ஆண்டவன் கொடுப்பானா? ஆக நாம் தப்பு செய்துவிட்டு, ஆண்டவன் மேல் தப்பைப் போட்டுவிடுகிறோம். ஆண்டவன் கொடுத்தான் என்று விட்டுவிட்டால், ஆண்டவன் எழுந்து வந்தா பார்ப்பான். வா என்று சொன்னவுடன் ஆண்டவன் வருகிறானா? எந்த ஆண்டவனும் வரமாட்டான். இங்கே மின்சார விளக்குகள் போட்டுள்ளார்கள். இன்னும் அதிகமாக வெளிச்சம் வேண்டும் என்று சொல்லி விளக்குகளை அதிகப்படுத்தினால், பியூஸ் போய்விடும். அந்த அளவு சக்தி இராது. எவ்வளவு தாங்குமோ அந்த அளவுக்குத்தான் கால்வாயிலே தண்ணீரை விட முடியும். அதிகமாக விட்டால் கரையெல்லாம் உடைந்து போய்விடும். ஒரு குடும்பம் எவ்வளவு தாங்குமோ அவ்வளவு பிள்ளைகளைத் தான் பெற்றுக் கொள்ள வேண்டும். அதிகமாக பெற்றுக் கொண்டால் குடும்பத்தில் தொல்லைகளும் துயரங்களும் ஏற்படும், கடனுக்கு உள்ளாவோம். ஆகக் கடன் படும் போது மனிதனுக்குச் சுமை கூடுகிறது. சுமை வரும் போது உள்ளத்தில் வேதனை வருகிறது. வேதனை



சென்னையில் உழைக்கும் சங்கத்தினர் நடத்திய குடும்பநல விழாவில் பங்கேற்ற தாய்மார்கள் கூட்டத்தில் ஒரு பகுதியினர்.

வரும் போது உடம்பு கெடுகிறது. அப்படிக் போது. அந்த வீட்டில் யாரைப் பார்த்தாலும் நே உள்ளாகி இருப்பார்கள்.

ஒரு வீட்டில் அதிகமாக நோய் வருவ காரணமும் நிறையப் பிள்ளைகளைப் பெற்றுக் கொ தொல்லைப்படுவதுதான். 'இந்தப் பிள்ளைக வளர்க்க முடியவில்லையே—நல்ல எதிர்காலத்தை களுக்குத் தர முடியவில்லையே' எனத் தாய் தந் ஏங்குவதால் அவர்கள் பாதிக்கிப்படுகிறார்கள். குழந்தைகளும் பாதிக்கப்படுகின்றன. அந் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது ஒவ் தாய், தந்தையரின் கடமை என உணரவேண் ஆணோ, பெண்ணோ அது எந்தக் குழந்தை இருந்தாலும் நல்ல குழந்தையாக—சக்தி நி குழந்தையாக—நோய் நொடியில்லாத குழந்தை இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். தந்தையர்களுக்குப் பாரம் இல்லாத குழந்தைகள், நாட்டிற்குப் பாரமில்லாத குழந்தைகளாக எல் குழந்தைகளும் அனைவராலும் விரும்பப்படுகிற குழ களாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் கு நலத் திட்டத்தை வலியுறுத்தி வருகிறோம்.

இங்கே திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர் 'நடப்பு ஆண்டில் இந்த மாவட்டத்தில் 12,000 அறு சிகிச்சைகள் செய்து முடித்துள்ளோம். அடுத்த ஆ நிறையச் செய்வோம்', என்று சொன்னார்கள். என தெரியும் அதில் எவ்வளவு கடினம் இருந்தது எ அதில் எவ்வளவு கஷ்டம் இருந்தது என்று என தெரியும். குறிப்பாக ஒன்றியங்களில் பணியாற்றுகி ஒவ்வொரு அதிகாரியும் எந்த அளவுக்குப் பணியா யிருக்கிறார் என்பதை நான் உணர்ந்தவன். நேரத்தில் மாவட்டத்தில் இருக்கின்ற குடும்ப பிரச்சாரப் பணியிலே ஈடுபட்டிருப்பவர்கள். இத்தி நிறைவேற்றத்திற்காகப் பிரச்சாரம் செய்வத எந்த அளவு ஈடுபட்டிருப்பார்கள்—பாடுபட்டிருப்பார் என்பதை நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன்.

குடும்ப நலத் திட்டந்தானே, சுகாதார ம பார்த்துக் கொள்ளட்டும் என்று விட்டு விட்டுப் பே விட்டால் நான் மட்டும் எங்கே போய் நிற்பது! இத்திட்டத்தைப் பொறுத்தமட்டில் எல்லோரும் சேர்ந் செயல்பட்டாக வேண்டும். பலபேர் சேர்ந்து கைதட்டினால் தான் ஓசை எழும். ஆகவே அப்படி அனை வரையும் சேர்த்துச் செயலாற்ற வேண்டிய ஒரு பொறுப் இந்த குடும்ப நலத் துறை இருப்பதாலே தான் மாவட் ஆட்சித் தலைவரைக் கூப்பிட்டு இந்தப் பொறுப்பை அவரிடம் கொடுக்கிறோம். ஆகவே கூட்டு முயற் யோடு இதில் நாம் வெற்றி பெற்றாக வேண்டும்.

நாங்கள் பேசி முடித்ததும் இங்கே ஒரு நாடக நடை பெறவிருக்கிறது. சினிமா நடிகர் டணால் தங் வேலு இங்கே நடிக்க இருக்கிறார். கதைக்குப் பெய சப்தசுரங்கள், குடும்ப நலத் திட்டத்திற்கும் சப்தசுரத்தி கும் சம்பந்தம் என்ன என்று கேட்கக்கூடும். சப்தசுர இருக்கிறதே அது இரண்டுக்கு இடையிலே தா தோன்றுகிறது. ஒன்று சுதி, இன்னொன்று தாளம் ஆக சுதி, தாளம் போல, குடும்பத்திற்கு இரண்டே குழந்தைகள் போதும் என்பதை வலியுறுத்தத்தா சப்தசுரங்கள் நாடகம் நடத்தப்படுகிறது. ஆக இந் சப்தசுரங்கள் சுதி, தாளத்திற்கு இடையே வரும் போ பெருமை சேர்ப்பது போல, இரண்டே பிள்ளைகளோ அவரவர் குடும்பத்திற்கும் நாட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

# குடும்ப நல வெற்றியே வீட்டின் வெற்றி! நாட்டின் வெற்றி!!

## கைத்தறித் துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்

*[திருச்சி மாவட்டம் ஆளவந்த நல்லூரில் எடுக்கப்பட்ட ம்ப நல மும்மாத நிறைவு விழாவிற்குத் தலைமை வகித்து ரையுமகு கைத்தறித்துறை அமைச்சர் திருமதி. சுப்புலட்சுமி தசன் அவர்கள் ஆற்றிய உரை.]*



ஆளவந்த நல்லூர் கிராம மக்கள் இதுபோன்ற டிருக்கிரு பெரு விழாவைக் கண்டுகளித்திருககமாட்டார்கள் பற்றிஞு கருதுகிறேன். குடும்ப நலத்திட்டத்தை விளக்கு துணிற வகையில் நடத்தப்படுகின்ற இது போன்ற விழாக் அப்ல! முன்பெல்லாம் பெரிய நகரங்களிலும், வசதி மக்க வேண்ங்களிலுப் தான் நடந்து வந்திருக்கின்றன என்பதை இன்லெ பார்த்திருக்கின்றோம். இதுபோன்ற நாடகத்தின் விதத்தில் மககளுக்கு நல்ல கருத்தை எடுத்து வைக்கின்ற வாய்ந்ப்பினை எல்லாம் நகரங்களே இதுவரை அனுபவித்து காரணதுள்ளன என்பதையும், இதுபோன்ற கிராமங்களில் காரணமடிப்பட்ட நிகழ்ச்சிகளை நடத்துவது இன்றைய வமிழக அரசு தான் என்பதையும் கிராமப் புறங்களிலே இரன்க்கின்ற மக்கள் நல்ல முறையிலே புரிந்து கொண்டிருக் தரன் ரர்கள்.

சென்னையில் இதுபோன்ற விழாக்களை நடத்து நல்லாக இருந்தாலும் மிகப்பெரிய இடங்களில் நடத்தாமல். ன்னையைச் சுற்றியிருக்கும் இதுபோன்ற மிகவும் பின் குறிய இடங்களிலேதான் இந்தத் துறை இதுபோன்ற யாருமாக்களை நடத்திக் கொண்டிருக்கிறது.

எந்த மக்களுக்குக் குடும்ப நலத்திட்டம் குடும்ப நலக் த்துக்கள் சொல்லப்பட வேண்டுமோ, எப்படிப்பட்ட ள் இத்திட்டத்தை நல்ல முறையில் புரிந்து கொண்டு ல் பட வேண்டுமோ அப்படிப்பட்ட மக்களை நாம் வரை அணுகத்தவறியிருக்கின்றோம். பெற்ற கல்வி மூலம் இத்திட்டத்தை தாங்களே மேற்கொள்கின்ற ந்தவர்கள் மத்தியிலேதான் திரும்பத் திரும்ப இது ன்ற விளக்கக் கூட்டங்களும் கருத்துக்களும் எடுத்து க்கப்பட்டனவே ஒழிய, இதுபோன்ற படிப்பறி லாத மக்கள் நிறைந்துள்ள கிராமப் பகுதிகளில் இது ன்ற விழாக்கள் இதுவரை நடைபெறவில்லை பதை இங்கே நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

தமிழக அரசைப் பொறுத்த வரையில், தமிழகத்தில் பொற்காலத்தை உருவாக்க வேண்டுமென்றால் விலே கிராமங்கள் மறு மலர்ச்சியடைய வேண்டும் பதில் நாங்கள் அசைக்க முடியாத நம்பிக்கை ண்டுள்ளோம். ஒவ்வொரு துறையாலும் கிராமங்கள் ல முறையில் பயன் பெறுமாயின் நிச்சயமாகப் ரறிஞர் அண்ணா அவர்கள் கனவு கண்ட தமிழகத்தை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக் கின்றது. எனவே தான் எந்த ஒரு திட்டமாக இருந் தாலும், எந்த ஒரு வாய்ப்பாக இருந்தாலும் முதலில் அது கிராம மக்களுக்குக் கிட்ட வேண்டுமென்பதிலே இந்த அரசு அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளதன் விளைவுதான். இந்த மாபெரும் நிகழ்ச்சி ஆளவந்த நல்லூர் கிராமத்தில் நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமங்களில் வாழும் மக்களுக்கு வசதியும் வாய்ப்பும் மிகமிகக் குறைவு. காலையிலிருந்து மாலை வரை பல் வேறு காரியங்களில் ஈடுபட்டிருக்கும் அவர்கள், மாலையில் வீடு திரும்பியதும் உண்டு உறங்குவதற்கு முன் செய்தித்தாள்கள் படிக்கின்ற வாய்ப்போ, அல்லது வானொலியிலே கொடுக்கின்ற அறிவிப்புகளைக் கேட் கின்ற வாய்ப்போ நிச்சயமாகக் கிராம மக்களுக்குக் கிடை யாது. அப்படிப்பட்ட மக்களுக்கு, தமிழகத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது—இந்த அரசு கிராம மக்களுக் காக எப்படிப்பட்ட திட்டங்களை உருவாக்கி வருகிறது என்பதையெல்லாம் நல்ல முறையில் எடுத்துக் கூறு வதற்கும், திட்டங்களைச் சிறந்த முறையில் விளக்கிக் காண்பிப்பதற்கும் இதுபோன்ற கிராமங்களில் எடுக்கப் படுகின்ற விழாக்கள் தான் பெருந்துணையாக இருக் கின்றன.



ஒரு சாதாரண கிராமத்தில் இப்படி ஆயிரக்கணக் கான மக்கள் திரண்டிருக்கிறீர்கள் என்றால், இந்த விழாவில் கலந்து கொள்ள வரும் அமைச்சர்களும், அதிகாரிகளும் என்ன எடுத்துக்கூற இருக்கிறார்கள்—அதன் மூலம் நம்முடைய வாழ்க்கையை நாம் எந்த முறை யில் அமைத்துக் கொள்வது என்ற ஒரு எண்ணத்தின் அடிப்படையிலேதான் கிராம மக்கள் திரளாக இங்கு திரண்டு வந்துள்ளார்கள்.

குடும்ப நலத்திட்டத்தின் மும்மாத நிறைவு விழா இங்கே நடைபெறுகிறது. சாதாரணமாக இந்த விழாவை ஒரு பொதுக் கூட்டத்தோடு முடித்து விட்டிருந்தால், ஏதோ வந்தோம், அமைச்சர்கள் பேசினார்கள்—அதிகாரி கள் பேசினார்கள் என்று, இங்கே கூறப்படுகிற கருத்துக் களைப் புரிந்து கொண்டு செல்கிறவர்களும் உண்டு. என்ன சொன்னார்கள் என்பதைப் புரிந்து கொள்ளாமல் செல்பவர்களும் உண்டு. அப்படிப்பட்ட மக்களுக்கெல்லாம் குடும்பநலத் திட்டத்தின் அவசியத்தை எடுத்துக் கூறு வதற்காகத்தான் இந்நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. அதன் மூலம் நல்ல கருத்துக்கள் எடுத்து வைக்கப்படுகின்றன.


இந்த நாளை நிச்சயமாக நீங்கள் மறக்க மாட்டீர்கள், மறக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டு கோள். இங்கே பேசுகின்றவர்களும், நாடகத்தின் வாயிலாக கருத்துக்களைப் பரப்புகின்றவர்களும் அதைக் கிராம மக்கள் தெரிந்து வாழ்க்கையில் செயல் படுத்த வேண்டுமென்றுதான் விரும்புவார்கள்—நாங்கள் அதைத் தான் விரும்புகிறோம். நல்ல ஒரு குடும்பத்தை—இனிய ஒரு குடும்பத்தை உருவாக்கிக் கொண்டால் சிறப்பாக, வளமாக வாழலாம். அதுபோன்ற இனிய குடும்பங் களைக் கொண்டதுதான் ஒரு கிராமம். இதுபோன்ற பல கிராமங்களைக் கொண்டதுதான் தமிழ் நாடு என்று கூறத்தக்க அளவுக்குக் குடும்பநலத் திட்டத்தை ஏற்ப தின் மூலம் வீட்டிற்கும், நாட்டிற்கும் துணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

### குழந்தைகளைப்போல வருமானம் பெருகுவதில்லை!

குடும்ப நலத்திட்டத்தை மக்கள் தாங்களாகவே மனம் உவந்து வந்து ஏற்கும் சூழ்நிலையைத் தமிழக அரசு இன்றைக்கு ஏற்படுத்தி வருகிறது. குடும்ப நலம்



ஆளவந்த நல்லூர் விழாவில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினர்.



திருச்சி மாவட்டம் ஆளவந்த நல்லூரில் நடை குடும்பநல விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்று, இயக்குநர் திரு. வி. நாமதேவன் உரையாற்றுகிறார்.

என்றால் என்ன என்பதை முதலில் கிராமப்புற புரிந்து கொள்ளவேண்டும். உங்களுடைய அ வருவாய்க்கு ஏற்ப செலவினைக் குறைக்கின்ற ஒ யினை நீங்கள் மேற் கொள்ள வேண்டும். ஆண்டு குழந்தைகளின் எண்ணிக்கை பெருகுவதைப் அந்தக் குடும்பத்தின் வருமானம் பெருகுவதில் ஆண்டுதோறும் குழந்தைகளின் எண்ணிக்கைக்கு அரசாங்க உத்தியோகமாக இருந்தாலும் சம்பள உயர்த்திக் கொடுப்பதில்லை. அன்றாடக் கூலி செய்பவராக இருந்தால், இந்த ஆண்டு அதிகப்படி குழந்தை பிறந்திருக்கின்றதே என, கொடுக் கூலியைச் சற்றுக் கூட்டிக் கொடு என்று யாரும் செ வதில்லை. வரும் வருமானம் குடும்ப அள கொண்டு கூடுவதில்லை என்பதை நாம் மன கொள்ள வேண்டும். வருவாய்க்கு ஏற்பக்குடும்பத்தை திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். குறிப்பாகக் குடு நலத் திட்டம் பெண்களுக்கு மிக மிக உகந்ததாகும் இத்திட்டத்தை ஏற்றால் குடும்பத்தினுடைய தொந்த களையும், அதிகப்படியான செலவுகளையும் தாங்கி கொள்கிற பாரம்—வேதனை தந்தைக்குக் குறைகியம் அதே நேரத்தில் தாய்மார்களுடைய உடல் நலம் ட்டு காக்கப்படுகிறது. ஏற்கனவே இருக்கின்ற குழந் களை நல்ல முறையில் வளர்ப்பதற்கான சூழ் நில உருவாகிறது. இப்பொழுது இரண்டு குழந்தைது போதும் என்று கூறப்படுகிறது.

இரண்டு குழந்தைகளுக்கு மேல் இருந்தால் ரும் இரண்டு குழந்தைகளைக் கவனிக்கின்ற வாய்ப்பி நாம் கொஞ்சம் கொஞ்சமாக இழந்துவிடுகிறே பெற்றோர், உற்றார் இருந்தும் கவனிப்பற்ற நிலைதி வளர வேண்டிய சூழ்நிலை அந்தக் குழந்தைகள் ஏற்படுகிறது. குழந்தைகளுக்குச் சத்துணவு தருவதற்கு நல்ல குடிமக்களாக கல்வி அறிவு கொடுப்பதற் குடும்ப நலத் திட்டம் நல்லவிதமாக உதவுகில என்பதை இங்கே நான் எடுத்துக் கூற விரும்புகிறே. இரண்டு குழந்தைகளிருந்தால் அந்தக் குழந்தைகள் தேவைகளையெல்லாம் நிறைவு செய்து வைக்க முடியு ஒரு குடும்பத்தில் ஆண்டுதோறும் ஒரு குழந்தை எ நிலை இருக்குமானால் தாயினுடைய உடல் நிலை குழந்தைகளின் உடல் நலமும் சிதைந்து விடும்.



ருச்சி மாவட்டம் குருமணி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ல விழா நடந்த போது, திருச்சி மாவட்ட சுகாதார ர் குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போட்டு, அப்பணியைத் மவத்தார்.

ராமங்களில் வருகின்ற வருவாயைக் கொண்டு றாரும் வயிறார உண்டு, குழந்தைகளுக்கும் ர உணவு கொடுப்பது என்பது கடினமான ாகும். ஒரு குடும்பத்திலே இருக்கின்ற தாய் ல்லாம் பாடுபட்டு வருகிற கணவனுக்கு வயிறார கொடுக்க விரும்புகிறாள். அடுத்தபடியாகத் தன் ய குழந்தைகள் வயிறு நிரம்ப உண்ண வேண்டு கருதுகின்றாள். கணவனும் குழந்தைகளும் பிறகு மீதியிருக்கின்ற உணவை அந்தத்தாய் துகின்றாள். இரண்டு குழந்தைகள் உள்ள குடும்பத்தின் தாய்க்கு அரை வயிறு உணவு கிறதென்றால், மூன்றாவதாக அங்கொரு தை தோன்றுகின்ற நேரத்தில் அந்தத் தாயினு உணவு தான் பகிர்ந்து அளிக்கப்படுகிறது. று தன்னுடைய தேவைகளைத் தியாகம் செய்து தைகளைக் காப்பாற்றக்கூடிய சூழ்நிலை குடும்பத் உருவாகின்றது. தன்னுடைய தேவைகளை தியாகம் செய்வதன் காரணமாக அவளது உடல் பாதிக்கப்படுகிறது. ஒரு குடும்பத்தின் தலைவி உடல் நிலை பாதிக்கப்பட்டால் அந்தக் குடும்பத் ரிகள் எந்த அளவு பாதிக்கப்பட்டுவிடும் என்பதை ரிப்பார்க்க வேண்டும்.

### ாகளானாலும் ாடே போதும்!

ிராமங்களில் இருப்பவர்கள் குழந்தைகள்தான் பங்கள் என்ற கருத்தில்—நம்பிக்கையில் குழந்தை ப் பெறக்கூடாது. அப்படிப் பட்ட எண்ணங்கள் வேண்டும். குழந்தைகள் வேலைக்குச் செல்வது து குறைந்து வருகிறது. குழந்தைகள் தங்களைக் ாற்ற வேண்டுமெனக் கருதி வேலைக்கு அனுப்பாது களுக்கு நல்ல கல்வி கொடுக்க முனையவேண்டும். ாயத்தில் நல்ல இடத்தைப் பெற உதவும் கல்வியை ிகள் பெறுவதற்கும், நல்ல உள்ளத்தோடும் லாடும் வளர்வதற்கும் உரிய வாய்ப்பு வசதிகளை நம் குழந்தைகளுக்கு உருவாக்கித் தர வேண்டும்.

இன்றைபோது மிகப் பெரிய தீயாமக்கம் நம்மிடம் கிறது. குடும்பத்திலே ஆண் குழந்தை வேண்டு

மென்று வரிசையாகப் பெண் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வார்கள். பெண் குழந்தைகளாகிவிட்டால், ஆண் குழந்தைகள் வேண்டுமென்று. குடும்ப நலத் திட்டத்தைத் தவிர்த்துக் குழந்தைகள் பெற்றுக் கொள்வதைத் தாய் மார்கள் கட்டாயம் தவிர்த்தாக வேண்டும். இன்றைய சமுதாயத்தில் பெண்களுக்கும் சமவாய்ப்புத் தரப் படுகின்றது. கல்வி அறிவு மிக்க பெண்களுக்கு எல்லா வாய்ப்பும் கொடுக்கப்படுகிறது என்பதை நாம் அறிவோம். ஆண் செய்யக்கூடிய எல்லா வேலைகளை யும், அவர் பார்க்கக்கூடிய எல்லா உத்தியோகங்களை யும் பெண்களால் பார்க்க முடியும் என்ற சூழ்நிலை உருவாகி இருக்கிற நேரத்தில், ஆண் குழந்தைகள் வேண்டும் என்று கருதாமல், பிறந்தவை பெண்களாகி விட்டாலும் இரண்டோடு நிறுத்திக் கொண்டு சிறிய குடும்பமாக அமைத்துக் கொண்டு வாழ முற்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

குடும்ப நலத் திட்டத்தைப் பற்றி பின்னால் நாடகத் தின் மூலம் மிகத் தெளிவாக எடுத்துக் கூற இருக்கிறார் கள். கூட்டம் கேட்டோம். அமைச்சர்கள் பேசினார்கள். நாடகம் பார்த்தோம் என்ற அளவில் இருந்துவிடாது. இங்கே கூறப்பட்ட கருத்துக்களைச் சீர்தூக்கிப்பார்த்துச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டுமென வேண்டிக் கொள் கிறேன். அமைதியும், செல்வமும், பிற வசதிகளும் குறைவான குழந்தைகளையுடைய குடும்பங்களில் எப்படியிருக்கிறது என்பதைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம். பிறந்துவிட்ட குழந்தைகளை நல்ல முறையிலே வளர்க்க வேண்டும். அதே நேரத்தில் நம்முடைய உடல் நலத்தையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் நீங்கள் செயல்பட்டால் தான் அரசாங்கத் திட்டங்களால்கிட்டும் வெற்றி நல்ல பயனைத் தரும்.

அரசாங்கம் வகுக்கின்ற எந்த ஒரு திட்டமாக இருந்தாலும் பொது மக்களது ஆதரவும் வரவேற்பும் இல்லாவிட்டால் திட்டங்களைச் செயல்படுத்த நிச்சயமாக முடியாது. எந்தத் திட்டத்திற்குப் பொது மக்களுடைய ஆதரவும் வரவேற்பும் இருக்கிறதோ இல்லையோ, குடும்ப நலத் திட்டத்திற்கு நாட்டு மக்களின் முழு ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று மனதார நம்புகின்றோம்.

குடும்ப நலத் திட்டத்தால் மக்கள் தொகைப் பெருக்கம் கட்டுப்படுத்தப்படும்போது கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யத்தக்க திட்டங்களை அரசால் வெற்றிகரமாகச் செயல்படுத்த முடியும். கிராமப்புற மக்களுக்குக் குடி தண்ணீர் வசதி தேவை என்றாலும், போக்குவரத்து வசதி, மருத்துவ வசதி, பள்ளிகள் கட்டுதல் போன்ற வசதிகளெல்லாம் தேவை என்றாலும் அத்தனை வசதிகளையும் நல்ல முறையில் நிறைவேற்றுவதற்குக் குடும்ப நலத் திட்டம் வெற்றி பெற்றாக வேண்டுமென்பதை நாம் ஒவ்வொரு வரும் உணர்ந்து செயல்பட்டாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடும்ப நல வெற்றியே வீட்டின் வெற்றிக்கு அச்சாணி! நாட்டின் வெற்றிக்கு வீட்டின் வெற்றியே அடிப்படை என்பதை உணர்ந்து குடும்ப நலத் திட்டம் வெற்றி பெற அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டு மெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அட்டைப்படம்...

மடியிலிருக்கும் இந்த மாணிக்கக் குழந்தையே போதும், அடுத்த குழந்தை வேண்டவே வேண்டாமென்று அறிந்து மகிழ்வு பெற்ற அன்னையர்.

# அண்ணாமலை நகரில் இளைய தலைமுறை!

தென்னாற்காடு மாவட்ட அனைத்துக் கல்லூரி மாணவர்களுக் கான குடும்ப நலத்திட்டப் பேச்சுப் போட்டி 14-3-1979 ம் தேதியன்று அண்ணாமலைப் பல்கலைக்கழக செனட் அரங்கத்தில் சிறப்பாக நடை பெற்றது. பேச்சுப் போட்டிக்குக் கொடுக்கப்பெற்ற தலைப்பு "மக்கள் பெருக்கத்தால் மனித குல நலனுக்கு ஏற்படும் கேடுகள்" என்பதாகும். பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பேரா சிரியர்கள் பலரும் மற்றும் மாணவ மாணவியரும் ஆர்வம் நிரம்பிய நெஞ்சத்துடன் போட்டியினைக் கண்டும் கேட்டும் இன்புற்றிட, அரங்கம் நிரம்பி வழிந்திட அமர்ந் திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பேச்சுப் போட்டியினை நடத்திக் கொடுக்கும் பெரும் பொறுப் பினை, பல்கலைக்கழகத்தின் சமூக வியல் துறை ஏற்றுக் கொண்டது. சமூகவியல் துறைத் தலைவர் பேரா சிரியர் டாக்டர் ஜி. கோமதிநாயகம் அவர்கள், அனைவரையும் வர வேற்றுப் பேசினார். கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் எம். ஏ. மாத்யூ அவர்கள், விழா நிகழ்ச்சிக்குத் தலைமையேற்றுத் துவக்கி வைக்கும்போது, மக்கள் பெருக்கத்தினால் ஏற்படும் விளைவு களை மாணவர் சமுதாயம் புரிந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை விளக்கிக் கூறினார். இதன்பிறகு மாவட்ட குடும்ப நல விளம்பர அலுவலர் (பொறுப்பு) திரு. எஸ். மெய்யப்பன், பேச்சுப் போட்டியின் விதி முறைகளைத் தெளிவு படுத்தினார்.

இப்போட்டிக்கான பரிசுகள் :
முதல் பரிசுத்தொகை ரூ. 200/-
இரண்டாம் பரிசுத் தொகை ரூ.150/-
மூன்றாம் பரிசுத் தொகை ரூ. 100/-
குடும்ப நலத் துறையினால் அறிவிக்கப்பெற்ற இந்த மூன்று பரிசு களைத் தவிர, தென்னார்க்காடு மாவட்ட நேரு யுவ கேந்திரத்தின ரால் சிறந்த புத்தகங்களாக மூன்று ஆறுதல் பரிசுகள் கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது.

வெற்றிக்குரியவர்களைத் தேர்ந் தெடுக்கும் நடுவர்குழு மூவரைக் கொண்டது. நடுவர் குழுவின் தலைவர் திரு. ஜி. சுப்ரமண்யன் — இவர் புதுவை வானொலி நிலைய இயக்குநர்; அடுத்தவர் திரு. ஞான. வைத்தியநாதன் — இவர் வடலூரில் ஆசிரியப் பணியாற்றும் ஒரு சிறந்த நாவலாசிரியர். அடுத்தவர் திருமதி டி. வி. பத்மாவதி — இவர் சிதம்பரத்திலுள்ள ஒரு மேல்நிலைப் பள்ளியின் சிறந்த தலைமை ஆசிரியை.

நடுவர்களின் அறிமுகத்திற்குப் பின்பு, பேச்சுப் போட்டி ஆரம்ப மாயிற்று. பற்பல பழம்பெரும் பேச்சாளர்களின் சொன்மாரியில் நனைந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் அந்த "செனட் அரங்கம்" மறுபடியும் இன்றைய இளைய தலை முறையினரின் சொன்மாரியில் நனைந்து திளைத்தது. அரசினர் கலைக்கல்லூரி திண்டிவனம், கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி, கடலூர், அரசினர் கலைக்கல்லூரி, விழுப்புரம், கொளஞ்சியப்பர் அரசினர் கலைக்கல்லூரி, விருத்தாசலம், அரசினர் கலைக் கல்லூரி, கடலூர், மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகள் ஆகியவற்றின் சார்பில் 34 மாணவ மாணவிகள், மக்கள் தொகைப் பெருக்கத்தால் மனித குல நலனுக்கு ஏற்படும் கேடு பாடுகளைப் பல்வேறு கோணங்களிலிருந்தும் தெளிந்து ஆய்ந்த அருமையான கருத்துக் களை, சிறந்த சொல் திறனில் குழைத்து, அவையினருக்கு மேலான தொரு கருத்து விருந்தளித்தார்கள்.

கீழ்க்கண்ட மாணவ மாணவிகள் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந் தெடுக்கப் பெற்றனர் :-

முதல் பரிசு :

செல்வி ஆர். நந்தினி,
3ம் ஆண்டு பி. எஸ்ஸி.
(இரசாயனம்),
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

2ம் பரிசு :

செல்வன் ஏ. மகிழ்நன்,
2ம் ஆண்டு எம். எஸ்ஸி.
(நிலவியல்),
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

3ம் பரிசு :

செல்வி எம். நிர்மலா,
3ம் ஆண்டு பி. காம்.,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

ஆறுதல் பரிசு—1 :

செல்வன் டி. அமுத கணேசன்,
முதலாம் ஆண்டு பி. எஸ்ஸி.
(கணிதம்),
அரசினர் கலைக்கல்லூரி,
திண்டிவனம்.

ஆறுதல் பரிசு—2 :

செல்வன் ஜி. இராதாகிருஷ்ணன்,
3ம் ஆண்டு பி. ஏ. (வரலாறு),
அரசினர் கலைக்கல்லூரி,
விழுப்புரம்.

ஆறுதல் பரிசு—3 :

செல்வன் கே. இராசவேல்,
2ம் ஆண்டு பி. ஏ. (வரலாறு),
கொளஞ்சியப்பர் அரசினர்
கலைக்கல்லூரி, விருத்தாசலம்.

நடுவர் குழுத்தலைவர் புதுவை வானொலி நிலைய இயக்குநர் திரு. ஜி. சுப்ரமண்யன் அவர்கள், பரிசுக் குரியவர்களின் பட்டியலை அறிவித்த துடன், முதல் பரிசை ஒரு மாணவி பெற்றிருப்பது, பெண்கள் சமுதாயம் முன்னேறி வருவதை எடுத்துக்காட்டு வதுடன், முன்னேறும் இந்தப் பெண் கள் சமுதாயம், வரும் காலத்தில் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொண்டு, நன்மக்கட் சமுதாயம் வளருவதற்கு வழிவகுக்கும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும் என்று கருத்து விளக்கமளித்தார்.

இதன்பிறகு சிதம்பரம் நகர நீதிபதி திரு. எல். இராமநாதன் அவர்கள், வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு களை வழங்கினார். மாவட்ட குடும்ப நலம் மற்றும் தாய்-சேய் நல அதிகாரி டாக்டர் திருமதி எஸ். ஞானசுந்தரி அவர்கள் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கும், கலந்து கொண்டவர்களுக்கும் அச்சிடப் பெற்ற நற்சான்றிதழ்களை வழங்கினார்.

# கி.பி. 2000ல் இந்தியாவில் அனைவருக்கும் நல்வாழ்வு, மருத்துவ வசதிகள்

கடந்த ஆண்டு செப்டம்பர் திங்களில் 'அல்மா—அட்டா'வில் நடைபெற்ற அனைத்துலக நல்வாழ்வு மாநாடு, கி. பி. 2000-ல் அனைவருக்கும் நல்வாழ்வு, மருத்துவ வசதிகளை நல்குவதை எல்லா அரசுகளும் இலட்சியமாகக் கொண்டு செயலாற்ற வேண்டுமென தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

இம்மாநாட்டில் கலந்து கொண்ட இந்திய அரசின் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. ரபி ராய் அவர்கள், இத்தீர்மானத்தை வெறும் கனவு எனக் கருதக்கூடாதென்றும், இதை ஒரு உறுதி மொழியாகவும், சவாலாகவும் கொண்டு செயல் பட வேண்டுமென்றார். மேலும், இதற்காக உலக வங்கியும் உதவிட முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இந்தியா இச்சவாலை ஏற்றுச் செயல் பட முடியுமா என வினா எழுப்பப்படுகிறது. திட்டக் குழுவின் மதிப்பீட்டின் படி, கி. பி. 2000-ல் இந்தியாவின் மக்கள் தொகை 917 மில்லியனாக உயர்ந்திருக்கும். இதில் 674 மில்லியன் மக்கள் கிராமப்புறங்களிலும், 243 மில்லியன் மக்கள் நகர்ப்புறங்களிலும் வாழ்வார்கள்.

அப்போது இந்தியாவிற்குத் தேவைப்படும் நல்வாழ்வு மருத்துவ வசதிகளாவன. 674000 சமூக நல்வாழ்வு நிலையங்கள் தேவைப்படும். பயிற்றுவிக்கப்பட்ட 674000 மருத்துவச்சிகள் தேவைப்படுவர். 14000 ஆரம்ப சுகாதார நிலையங்களும் 28000 கிளை நிலையங்களும் (Subsidiary Centres). 14000 துணை நிலையங்களும் (Sub-Centres), 35000 முதல் 53500 வரையிலான உயர் நிலை பெற்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள் அல்லது துணை மாவட்ட மருத்துவ மனைகள், 400 மாவட்ட மருத்துவ மனைகள் தேவைப்படும்.

இந்நிலை ஏற்பட்டால் ஆரம்ப நல்வாழ்வு பேணுவதற்காக கிராமப்புறங்களில் 8000 மக்களுக்கு ஒரு மருத்துவர் கிட்டுவர். 3000 கிராமப் புற மக்களுக்கு மருத்துவமனையின் ஒரு படுக்கை வசதி கிடைக்கும். இப்போது 35000 மக்களுக்கு ஒரு மருத்துவர் உள்ளார். 15000 மக்களுக்கு மருத்துவ மனையின் ஒரு படுக்கை வசதி கிட்டுகிறது.

ஆறாவது திட்ட காலத்தில் இந்தியாவில் உயர்நிலை பெற்ற 400 ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை மாவட்ட மருத்துவமனைகள் ஒவ்வொன்றும் இரண்டு லட்சம் மக்களுக்குப் பயன்படும் வகையில், ஏற்படுத்தப்பட வேண்டும். 130 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 38000 துணை நிலையங்களும் (Sub-Centres) உருவாக்கப்பட வேண்டும். 5.7 லட்ச சமூக நல்வாழ்வு ஊழியர்களும், அதற்கு ஈடான அளவு மருத்துவச்சிகளும் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

அடுத்த 20 ஆண்டுகளில் இந்தியா 12 லட்சம் சமூக நல்வாழ்வு ஊழியர்களையும் மருத்துவச்சிகளையும் பயிற்றுவிக்க வேண்டும். 8649 ஆரம்ப சுகாதார நிலையங்களையும், 28000 கிளை நிலையங்களையும் (Subsidiary Centres), ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட துணை நிலையங்களையும் (Sub-Centres) பிறவற்றையும் உருவாக்க வேண்டும்.

எந்த நல்ல இலட்சியமாக இருந்தாலும் மக்கள் தொகைப் பெருக்கம் என்ற மாபெரும் நந்தி குறுக்கே நிற்காத நிலையே கிடையாது. எனவே மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்திட கைமாறு கருதாத முனைப்பான உதவி அனைத்து முனைகளிலிருந்தும் கிட்ட வேண்டும்.



ஊட்டியின் காட்டுப் பகுதியான ஆனைக்கட்டி என்னும் மலைஜாதியினர் வசிக்கும் இடத்தில், மாவட்ட வெள்ள நிவாரண எட்டாம் தெம்பர் குழுவின் தலைவர் டாக்டர் பி.ஏ. காணிக்கராஜ், இருளர் என்னும் ஆதிவாசிகளின் குழந்தைகளை மருத்துவ பரிசோதனை செய்தார்.

# குழந்தைகளிடையே தொற்று நோய்கள்

டாக்டர் எஸ்.டி. ஆச்சார், எம்.டி. எப்.ஆர்.சி.பி.

'ஒரு குழந்தையிடமிருந்து மற்றொரு குழந்தைக்கு டிப்தீரியா, கக்குவான், இருமல், சயம், இளம் பிள்ளை வாதம் ஆகிய நோய்கள் எளிதில் பரவக் கூடியவையாகும். இவற்றை இளம் வயதிலேயே தடுப்பு ஊசி போட்டுத் தடுக்க முடியும் என்பதை வலியுறுத்திக் கூற வேண்டியதாகிறது. நவீன மருத்துவ முறையில், இது ஒரு பெரிய வெற்றியாகும். இலேசான சுரம், சளி முதலியவை உள்ள குழந்தையைக் கூட, மற்ற குழந்தைகள் அணுகாமல் பார்த்துக் கொள்ளுவதே சாலச் சிறந்தது. ஏனெனில், பல நோய்கள் இப்படித் தான் ஆரம்பிக்கின்றன. மணல் வாரி, கக்குவான் போன்ற பல நோய்கள், ஆரம்ப நிலையில்தான் எளிதில் தொற்றுகின்றன. ஆனால், ஆரம்பமாகித்தோல் தடிப்பு, இருமல் முதலியவை வந்த பின்னர்தான், நாம் எச்சரிக்கையாக இருக்க ஆரம்பிக்கின்றோம். இந்த அடையாளங்கள் தோன்றுவதற்கு முன்பே அவை தொற்றி விடுகின்றன. ஆகையால், காய்ச்சல் அல்லது சளி தோன்றியவுடனே அக்குழந்தையைத் தனியே வைப்பது நலம். சளிக் காய்ச்சலைப் பொருட்படுத்தாமல் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவது ஆபத்தானதாகும். அந்த வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் நோய் தொற்றி விடலாமல்லவா? சிறிய குழந்தைக்கோ, அல்லது மெலிவான குழந்தைகளுக்கோ, இந்த நோய்கள் தோன்றினால், உடனே மருத்துவரிடம் காண்பித்தால், அவர் நோயைத் தடுக்கவோ, அன்றி எளிதில் அதைக் குணமாக்கவோ ஏற்ற மருந்துகளைக் கொடுப்பார்.

## டிப்தீரியா

இந்நோய், தொண்டையின் பின்புறத்திலும் "உள்நாக்கு" என்ற உறுப்பிலும் டிப்தீரியா கிருமிகள் தங்கி, வெள்ளைப் படை போன்ற சவ்வு அதில் உண்டாவதால் ஏற்படுகின்றது. இந்தச் சவ்வு, காற்றுக் குழாய்க்குப் பரவினால் குழந்தைக்கு மூச்சு விட முடியாது போய் விடும். தவிரக் கிருமிகள் விளைவிக்கின்ற நச்சுப் பொருள் குழந்தையின் உடலைப் பலவீனப் படுத்துவதோடு, நோய் நீங்காமல் இருக்கும் வேளையில் அல்லது நோய் குணமடையும் வேளையில் இருதயத்தைத் தாக்கக் கூடும். இந்தக் காரணத்தால் துவக்கத்தில் சாதாரண தொண்டை வலி போல் தோன்றினாலும், உடனடியாகக் கவனிக்க வேண்டிய நோயாக இது உள்ளது. டாக்டரால்தான் இதைக் கண்டு பிடிக்க இயலும். சவ்வு, மூச்சுக் குழாயில் பரவி விட்டால், அக்குழாயில் அறுவை மூலம் சிறு துவாரம் செய்து, உலோகக் குழாய் வைத்தால் தான் குழந்தை உயிர் பிழைக்க முடியும். இது மிகுந்த ஆபத்தான நிலையாகும். சில வேளைகளில், கழுத்தில் பக்கவாட்டிலுள்ள நிண நீர்ச் சுரப்பிகள் வீங்கி விடும். இந்த நோய்க்கு ஒரு நல்ல மருந்து இருக்கிறது. அது தான் எதிர்ப்புச் சக்தி நிறைந்த குதிரையின் குருதி நீர் (சீரம்) எனினும் மிக விரைவில் நோயைக் கண்டு பிடித்து, இதை ஊசி மூலம் செலுத்தினால் தான், நோய் குணமாகும். நேரத்தை வீணடித்தால், உறுதியாக ஆபத்து விளையும்.

யாரும் பூரணமாகத் தடுக்கக்கூடிய இந்த நோய் இந்தியாவில் பெருவாரியாகக் காணப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் மேலை நாட்டிலும் இந்த நோய் வந்த குழந்தைகளின் நிலைமை மோசமாகத் தானிருந்தது. ஆயினும் தடுப்பு ஊசிகளைப் பரந்த அளவில் நாடெங்கும் உள்ள குழந்தைகளுக்குப் போட ஆரம்பித்தார்கள். நாளடைவில் இந்த நோய் அங்கே மறைந்து விட்டது. அங்கேயுள்ள பெற்றோர்கள், எல்லாக் குழந்தைகளையும் முறையோடு டிப்தீரியாவிலிருந்து காப்பாற்றுவதற்கு ஊக்கமளிக்கிறார்கள். ஏனெனில், சிறிது ஏமாந்தால் நோய் மீண்டும் அங்கே தோன்றி விடும் என்று பயப்படுகிறார்கள். இந்தச் சாதாரணத் தடுப்பு ஊசியால், நோயை ஒழிக்கும் முறையை இந்தியாவில் பயன்படுத்துவதற்கு, மிக அதிகமான தேவை இருக்கின்றது. குழந்தைகளுக்கு மூன்று மாதமானவுடனே அல்லது அதற்கு பின்னர் மாதத்திற்கு ஒன்றாக இரு ஊசிகள் போட்டால் நோய் வராமல் தடுக்கலாம். இந்த டிப்தீரியாத் தடுப்பு ஊசி, மருந்துடனே, கக்குவான், டெடனஸ் (வாய்ப்பூட்டு) நோய்களுக்குத் தடுப்பு மருந்துகளையும் சேர்த்தே குழந்தையின் உடலில் செலுத்தலாம். இவ்வாறே செய்தால், ஒரே ஊசி மூலமாக மூன்று நோய்களையும் தடுக்க முடியும்.

## கக்குவான் இருமல்

இதுவும், குழந்தைகளுக்கு இயற்கையாகத் தோன்றும் ஒரு நோய். அனேகமாக, ஒரே வேளையில் பலருக்குத் தோன்றும். அல்லது ஒருவருக்குப் பின் ஒருவராக மற்றவர்களுக்குத் தோன்றும். ஏனெனில், இது விரைவில் பரவும் தொற்று நோயாகும். ஆரம்ப நிலையில், இருமல் மூலம் நோய்க் கிருமிகள் காற்றில் கலந்து, அதனால் மற்றவர்களுக்கு விரைவில் தொற்றுகிறது. நோய் கண்ட முதல் வாரத்தில், சாதாரண இருமல் போலவே தோன்றும். பின்னர் நாளடையில், நீண்ட நேரமாக இருமல் ஏற்பட்டு, முகம் சிவந்து, வாந்தி எடுக்கக் கூடும். இறுதியாகக் குழந்தையின் இளைப்புச் சப்தம் கேட்கும். அதாவது நீண்ட நேரம் இருமி முடிந்த பின்னர், மீண்டும் மூச்சை உள்ளே இழுக்கும்போது, இந்த விதமான ஒலி உண்டாகும். இதைத் தான் "வூப்" என்று சொல்லுவார்கள். சில வேளைகளில், குழந்தைகளுக்கு இந்த இழுப்பு, வாந்தி முதலியன தோன்றுமளவிற்கு நோய் முற்றுவதில்லை. கக்குவான் இருமல் சாதாரணமாக நான்கு வாரங்கள் வரை இருக்கும். சிலருக்கு இரண்டு அல்லது மூன்று மாதங்கள் கூட இந்த இருமல் இருக்கலாம். சிறிய குழந்தைகளுக்கு இது ஆப்த்தான நோயாகும். ஏனெனில் அதனால் உடல் பலஹீனமும், நிமோனியாவும் ஏற்படக் கூடும். மருத்துவர் எழுதித் தரும் மருந்தைக் கொடுப்பதோடு, காய்ச்சல் இல்லாவிட்டால், திறந்த

வெளியில் குழந்தை அவ்வப்பொழுது இருப்பது, இந்த இருமல் நோய்க்கு மிகவும் நல்லது.

## குழந்தையைப் பராமரித்தல்

நோயுள்ள குழந்தை, மற்ற குழந்தைகளோடு பழகவோ, அல்லது விளையாடவோ கூடாது. பள்ளிக்கூடத்திற்கு ஒரு மாதம் வரை போகக் கூடாது. வாந்தி இருந்தால், மூன்று வேளை நிறையச் சாப்பிடுவதைத் தவிர்த்து, அடிக்கடி சிறிய அளவில் உணவு கொடுத்தால், குழந்தை வாந்தி எடுக்காது. வாந்தி எடுத்து, முடிந்தவுடனே உணவு கொடுக்கலாம். மறுபடியும் இருமல் வருவதற்குச் சிறிது நேரமாகுமாதலால், உணவு வயிற்றில் தங்கிச் செரிக்க முடியும்.

## பெரியம்மை

அம்மை குத்தும் முறையில், இதைத் தடுக்கலாம். ஆனால் துரதிர்ஷ்டவசமாகச் சில குழந்தைகள் அம்மை குத்தாமலே தப்பி விடுவதாலும், பெரியவர்கள் மீண்டும் இடையிடையே அம்மை குத்திக் கொள்ளாததாலும், இந்த நோய் நெடுங்காலமாக ஒரு தொற்று நோயாக இருந்து வந்தது. ஆறு மாதத்தில் குழந்தைக்கு அம்மை குத்தினால், சில வருடங்களுக்குப் பாதுகாப்பு இருக்கும். மீண்டும் ஐந்தாவது வயதில் ஒரு முறை குத்திய பின்னர், இந்த நோய் ஊரில் பரவியுள்ள காலத்திலும், அருகிலுள்ள பகுதிகளில் தோன்றும்போதும், மறுமுறை குத்த வேண்டும். முதல் முறை அம்மை குத்திய பின்னர் நான்கைந்து நாட்களில் சுரம் வருவதால் சில பெற்றோர் குழந்தைக்கு அம்மைப் பால் வைப்பதற்குப் பயப்படுகிறார்கள். பால் வைத்த இடத்திலும், செம்மை நிறமும், வீக்கமும், நீர்க் கசிவும் ஏற்படும். சில நாட்களில் புண்ணாக இருந்த இடம் உலர்ந்து ஆறிவிடும். ஆனால் இந்த மாறுதல்கள் ஏற்பட்டால்தான் அம்மைப் பால் வைத்த பலன் பூரணமாகும். பெற்றோர்கள், அம்மைப் பால் வைப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து விட்டால், மறுக்கவோ அதை வைப்பதற்குரிய சந்தர்ப்பத்தை இழக்கவோ விரும்ப மாட்டார்கள். அம்மை குத்தாதவர்களுக்கு பெரியம்மை பிற்காலத்தில் தோன்றினால், உயிருக்கு ஆபத்தாக முடியும். அல்லது முகம், கை, கால்கள் விகாரமாகலாம். கண்களில் புள்ளிகள் தோன்றினால் குருடாகக் கூடும். மூன்று மாதத்திலிருந்து ஆறு மாதத்திற்குள் குழந்தைகளுக்கு அம்மை வைத்தல் நலம். இளம் வயதில் அதிகமான கோளாறு ஏற்படாது. குழந்தைக்கு உடல் நலக் குறை இருந்தால், அல்லது சரும நோய் இருந்தால் அம்மை வைப்பதைச் சிறிது தள்ளிப்போடலாம். இரண்டு அல்லது மூன்று நாள் காய்ச்சல் அடித்த பின்னர் அம்மைக் கொப்புளங்கள் உடலில் தோன்றும். பெரியம்மை இப்பொழுது ஒழிந்திருக்கிறது.

அது முதலில் சிவப்பாகவும் தடிப்பாகவும் முகத்தில் தோன்றும். முகத்திலும், மார்பிலும் கொப்புளங்கள் அதிகமிராது. இவை பின்னர் நீர் கோத்துக் கொண்டு சிறிய முத்துக்களாக மாறிச் சீழ் பிடித்த பின்னர், கொப்புளங்கள் காய்ந்து ஆறி விடும். ஆபத்தான சில அம்மைகளில், கொப்புளங்கள் தனித்திராமல் ஒன்றாகச் சேர்ந்து அவற்றுடனே அபாயகரமான பிற குறிகளும் தென்படும். பெரியம்மை வந்த குழந்தைகளுக்குக் கொப்புளங்கள் காய்ந்து உதிரும் வரை, மற்றவர்கள் அருகில் வராமல் குழந்தையைத் தனிமைப்படுத்தி வைக்க வேண்டும்.

## சின்ன அம்மை

இது பெரியம்மையைப் போலவே தோன்றும். வேறு ஒரு நுண் அணுக் கிருமியால் ஏற்படுவது இது. அம்மை குத்திக் கொள்ளுவதால் இந்த நோயைத் தடுக்க முடியாது. நவீன மருத்துவத்தில், இதற்கு இன்னும் தடுப்பு ஊசி மருந்து கண்டு பிடிக்கப் படவில்லை. ஆனால், நோய் வந்தவரைத் தனிமைப்படுத்தி வைப்பதால், இந்த நோய் மற்றவருக்குப் பரவாமல் தடுக்க முடியும். அதிர்ஷ்டவசமாக இந்த சின்னம்மை நோய், சாதாரணமாக வந்தது போலவே போய்விடும்.

## மணல் வாரி

இது குழந்தைகளுக்கு வரும் ஒரு தொற்று நோயாகும். சளி, காய்ச்சல் மூக்கிலிருந்து நீர் வடிதல், கண்ணீர் வடிதல் முதலியவற்றோடு சாதாரண தடுமன், (ஜலதோஷம்) போல ஆரம்பிக்கும்.

கொப்புளங்கள் ஆறாவது நாளில் தான் தோன்றும். கொப்புளங்கள் தோன்று முன்னர் காய்ச்சல் உச்ச நிலையிலிருக்கும். பின்னர் தணிந்து விடும். அம்மைக் கொப்புளங்கள் சிவந்து வேர்க்குருப் புள்ளிகள் போலவே, முதலாவதாக முகத்தில் தோன்றும். பின்னர் மார்பு, கை கால்களிலும் பரவும். பெரியம்மை, சிறிய அம்மை போன்று நீர் தொடுப்பதில்லை. ஐந்து அல்லது ஆறு நாட்களில் கொப்புளங்கள் ஏடு ஏடாகப் பெயர்ந்து காய்ந்து பூரணமாக மறைந்து விடும். தழும்புகள் உண்டாவதில்லை.

## எவ்வாறு இதைத் தடுப்பது?

உங்கள் குழந்தைகளுக்கு சளி, மூக்கில் நீர் வடிதல், உடல் சூடு, கண்ணீர் வடிதல் முதலியன இருந்தால், பள்ளிக்கு அனுப்பாதீர்கள். அம்மைக் கொப்புளங்கள் தோன்றுவதற்கு முன்னர் தான், இந்த நோய் மிக விரைவில் தோன்றும். ஏற்கனவே மணல் வாரி வந்த குழந்தையாக இருந்தால், இலேசாகப் போய் விடும் என்று தோன்றினால், சிகிச்சையின்றி விட்டு விடலாம். குழந்தை மெலிந்து பலவீனமாயிருந்தால் உங்கள் மருத்துவர் என்ன செய்வதென்று கூறுவார். இந்த அம்மை அதனால் தோன்றும். பலவகைச் சிக்கல்களினால் சற்றே அபாயகரமானது. இதிலிருந்து, நிமோனியா, காய் அழற்சி முதலியன உண்டாகலாம். ஆனால் நல்வினைப் பயனாக, இவற்றை நவீன மருந்துகளால் தடுத்துக் குணப்படுத்தி விடலாம். இந்த அம்மை நோய் வந்தால், மருந்தே கொடுக்கக் கூடாது என்ற ஒரு கொள்கை இந்தியாவில் தொன்று தொட்டு இருந்து வருகிறது. மணல்வாரியைப் பொறுத்த வரையில் எக்காரணத்தினாலாவது இக்கொள்கையை யாராவது பின்பற்றினால் பெருந் தீங்கு நேரிடும்.

## பொன்னுக்கு வீங்கி

உடலில் காதுகளின் முன் புறத்திலும், கீழ்ப்புறத்திலும் வீக்கம் ஏற்படுவது, இந்த நோயின் அறி குறியாகும். சாதாரணமாகச் சிறிது காய்ச்சல், உடல் அசதி இவற்றுடனே மெல்லும் போதும், விழுங்கும் போதும், சிறிது வலி முதலியன இருக்கும். இதன் ஆதிக்கம் பத்து நாட்கள் வரை இருக்கும். இதைத் தடுப்பதற்கு, அம்மைப் பால் அல்லது சீரம் முதலியன இல்லாததால், பதினைந்து நாட்களுக்குக் குழந்தையைத் தனிப்படுத்தியே வைக்க வேண்டும்.

## பித்த வாதக் காய்ச்சல், டைபாயிடு சுரம்

இந்த நோய், நோயாளியைப் படுக்க வைத்து விடும். இந்த நீண்ட நச்சுக் காய்ச்சல் ஒருவிதக் கிருமியால் ஏற்படுகிறது. ஏற்கனவே இக்காய்ச்சல் வந்தவர்களிடமிருந்தும், மலம், சிறுநீர் மூலம் நோய்க் கிருமிகளை வெளியேற்றுபவர்களிடமிருந்தும், இந்த நோய் மற்றவர்களுக்குத் தொற்றுகிறது.

இப்படிப்பட்ட நோய் உடையவர்கள் உணவு சமைத்தாலோ, அல்லது பரிமாறினாலோ, அவர்கள் ஆசன வாயைக் கழுவிய கையிலுள்ள கிருமிகள் உணவில் தொற்றியோ, மற்றவருக்கு இது பரவும். ஈக்கள் இந்த நோயை பரப்பும் பணியில், முக்கிய பங்கு வகிக்கின்றன. அவை நோயாளியின் மலத்திலிருந்து, வீட்டிலும், பண்டங்களைத் திறந்து வைத்து விற்கின்ற கடைகளில் உள்ள பண்டங்களிலும் வந்து உட்காருவதால், நோயைப் பரப்புகின்றன.

## ஈயாரின் திருப்பணி

தெருவில் விற்கும் ஐஸ்கிரீம், கொதிக்க வைக்காத ஈ மொய்த்த சர்க்கரை உபயோகித்துச் செய்யப்படும் பண்டங்களில், கிருமிகள் தங்கியிருந்து நோயைப் பரப்புகின்றன.

இந்தியாவில் இந்த நோய் பெருமளவில் தோன்றுகிறது. சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் மேலை நாட்டிலும் நிலைமை இவ்வாறேதான் மிக மோசமாக இருந்தது. தற்போது நல்வாழ்வு பற்றிய அறிவு பெருகியதன் காரணமாகவும், சாக்கடைகளில் நீர் தேங்காமல் வெளியேற்றப்படுவதினாலும், நோய்க் கிருமிகள் உடையவர்களை இனங்கண்டு அறிவதாலும், நிலைமை மாறி விட்டது. அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சில நோயாளிகள் இருக்கலாம். ஆனால் இச்செய்தி கிடைத்த உடனே பத்திரிக்கைகளில் பிரசுரிக்கப்பட்டுப் பொது மக்களுக்கு எச்சரிக்கை செய்து தகுந்த முன் பாதுகாப்புகளை மேற்கொண்டு, நோய் தோன்றியதன் காரணத்தை ஆராய்ந்து பார்க்கின்றார்கள். ''டைபாயிடு'' தடுப்பு ஊசி போட்டால், காய்ச்சலைத் தடுக்க முடியும். அந்த ஊசி ஓர் ஆண்டு வரைக்கும் மட்டுமே பாதுகாப்பு அளிப்பதால் ஒவ்வோர் ஆண்டிலும் தடுப்பு ஊசி போட வேண்டியதாகிறது. அல்லது நோய் தொற்றும் ஆபத்துக் காலங்களிலாவது தடுப்பு ஊசி போட்டுக் கொள்ள வேண்டும்.

சளி, அம்மைக் கொப்புளங்கள், சீழ், கட்டி இவை எதுவும் இல்லாமலே காய்ச்சல் பல நாட்கள் நீடித்தால், 'டைபாயிடு' என்று சந்தேகப்படுவார்கள். இரத்தப் பரிசோதனையால், இதை இன்னதென்று நிரூபிக்கலாம்.

## நோய் வந்த குழந்தையைப் பராமரித்தல்


குழந்தையை வீட்டிலேயே வைத்துச் சிகிச்சை அளித்தால் குடும்பத்திலுள்ள மற்றவருக்கும் நோய் பரவாமல், முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும். பெரியம்மை, சிறு அம்மை, டிப்தீரியா போலன்றி, இந்த நச்சுக் காய்ச்சலின் கிருமிகள், சிறுநீரின் வழியாக வெளியேற்றப்படுகின்றன. ஆகையால் நோயாளியின் மலத்தையும், சிறு நீரையும் ஒரு பாத்திரத்தில் (பெட் பான்) சேகரித்து மருத்துவரின் யோசனைப்படியே, உடனே பினைல் ஊற்றி ''பிளஷ் அவுட்'' கக்கூசுகளில் ஊற்றி விடலாம், அல்லது சுகாதார வசதிகளைப் பொறுத்து, வேறு நல்ல முறையில், கழிவுப் பொருட்களை வெளியேற்றலாம். குழந்தையையும், ''பெட்பான்'' பாத்திரத்தையும் தொடுபவர்கள், உடனே கையைச் சோப்பு போட்டுக் கழுவி ஒவ்வொரு முறையும் மருந்து கலந்த ''லோஷனில்'' கையை அமுக்கி எடுக்க வேண்டும். வீட்டில் அனைவரும் விரைவில் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளவேண்டும். முன் காலத்தில் இந்த நோயாளிகளுக்கு உணவே கொடுப்பதில்லை. ஆனால், தற்கால மருத்துவர்கள், மிதமான அளவில் உணவு கொடுக்கச் சொல்லுகிறார்கள். எளிதில் செரிக்கக் கூடிய அரிசிக் கஞ்சி, அதுவுமன்றிப் பாலையும் பாலுடன் அடித்துக் கலந்த முட்டையையும் கூடச் சாப்பிட அனுமதிக்கின்றார்கள்.

## இளம் பிள்ளை வாதம்

இது மிகவும் குறுகிய கால நோய் காரணமின்றியே காய்ச்சல் உண்டாகிப் பின்னர் உடலின் சில தசைகளில் வாதம் ஏற்படும். இதனால், கை, கால்கள் இவற்றில் ஒன்றோ, இரண்டோ அசைக்க முடியாமலே போய் விடக்கூடும். இந்த வகை வாதம், சில வாரங்களில் அல்லது சில மாதங்களில் மறைந்து விடும்.

வாதத்தால் பாதிக்கப்பட்ட தசைகள், எந்த அளவில் மறுபடி வேலை செய்யப் பயன் படும் என்பதைச் சொல்ல இயலாது. எந்த மருந்துகளாலும், இதைக் கட்டுப்படுத்த முடியாது. நோயின் கடுமை தணிந்த பின்னர், மருத்துவரின் யோசனைப்படியே உடற் பயிற்சிகள் செய்தல், தசையைப் பிடித்து விடுதல் இவற்றால் ஓரளவு பயன் ஏற்படலாம். பெருமளவில் பரவி, ஒரு பரபரப்பை உண்டாக்கி விட்ட இந்த நோய், இந்தியாவிலும் பரவியுள்ளது. இதற்கு ஒரு தடுப்பு ஊசியும் வாய் வழியே செலுத்தும் வாக்சின் மருந்தும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் புதிய ஊசி, வாய் வழி மருந்து கண்டு பிடிப்பு, நவீன மருத்துவ விஞ்ஞானத்தின் ஒரு பெரிய வெற்றியாகும். ஊசி மருந்து, சாதாரண அணு தரிசினி மூலமும் காண முடியாத இந்த நோயின் கிருமிகளை குரங்கின் உள் அவயவங்களில் பெருகி வளரச் செய்து, மனிதன் உடலில் செலுத்தினால், கிருமிகளை அபாயமில்லாத நிலைக்குக் கொண்டு வருகின்றது. இது இந்தியாவில் தாராளமாகக் கிடைக்கின்றது. ஆயினும் இது நோயைத் தடுப்பதற்குத்தான் பயன்படுமேயன்றி, நோயின் குறிகள் தோன்றிய பின்னர் சிகிச்சை அளிப்பதால் பெரும் பயன் இராது.

நன்றி : 'நல்வழி'.



மத்திய நல்வாழ்வுத்துறை அமைச்சர் தலைமையில் 7-7-79 முதல் 9-7-79 வரை புதுடில்லியில் நடந்தேறிய மாநிலக் குடும்ப நல விளம்பர அலுவலர்கள் மாநாட்டின் ஒரு பகுதி.



# இந்தியாவில் அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டு

எஸ். முத்துராமலிங்கம்

புன்னகை மொட்டுகள்
புதியநற் கவிதைகள்
வெண்ணிலாக் கீற்றுகள்
வேதத்தின் சாரங்கள்

தன்னிக ரற்றதோர்
தனிப்பெரும் செல்வங்கள்
விண்ணிலும் மண்ணிலும்
விளையாடும் கீதங்கள்

பிள்ளைகள் அலஅவை
பேசிடும் தெய்வங்கள்
காதலும் கவிதையும்
கடைசியிற் தள்ளியே

குழந்தைகள் பற்றி அரசவைக் கவிஞர் கண்ணதாசன் அவர்களின் அழகான படப்பிடிப்பு இது? அனைத்து நாடுகளிலும் வாழும் இத்தகைய குழந்தைகளின் வாழ்வைச் சிறக்கச் செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் ஐ.நா. மன்றம் 1979-ஆம் ஆண்டை அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டு என அறிவித்துச் செயல் பட்டு வருகிறது! இன்றைக்கு அக்கருத்து செயல் வடிவம் பெற்றுள்ளது. ஆனால் இத்தகைய தொரு அருமையான திட்டத்தை 1950க்கும் 1960க்கும் இடைப்பட்ட காலத்தில் ஐ.நா. மன்றத்தில் வலியுறுத்திப் பேசியவர் இந்தியப் பிரதி நிதியாக இருந்த திரு. கிருஷ்ண மேனன் என்பதைப் பலர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

சிவப்பு ரோஜா

குழந்தையைத் தெய்வமாய்க்
கொஞ்சினான் ஜவஹர்லால்
அவனுமோர் குழந்தையாய்
அவருடன் ஆடினான்

செருகுவான் சட்டையிற்
சிவப்புரோ ஜாவினை
மறுகுவான் கண்டதும்
மழலைரோ ஜாவினை

என எந்தப் பண்டிதரின் குழந்தையுள்ளத்தைக் கவியரசு புகழ்கிறாரோ, அதே பண்டித நேரு அவர்கள் தான் இந்தியப் பிரதி நிதியின் வாயிலாக ஐ.நா. மன்றத்தில் குழந்தைகள் ஆண்டு குறித்துப் பேச வேண்டும் என்ற மூலக் கருத்தை நல்கியவராக இருக்கவேண்டும். 'உலகக் குழந்தைகள் நாள்' எடுக்கப்பட வேண்டும் என்ற ஐ.நா.மன்றத் தீர்மானம் 1954-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் நாள் நிறைவேறியது. 1956-ஆம் ஆண்டு முதல் உலக நாடுகள் 'குழந்தைகள் நாள்' எடுக்க வேண்டுமென அத்தீர்மானம் பரிந்துரைத்தது. இந்தியாவின் முதல் பிரதமரான பண்டித நேரு அவர்களது பிறந்த நாளான நவம்பர் 14-ஆம் நாள், ஆண்டுதோறும் இந்தியாவில் 'குழந்தைகள் நாள்' கொண்டாடப் படுகிறது. இந்தக் குழந்தைகள் நாள் கொண்டாடப்படுவதின் நோக்கம் குறித்த விளக்கம் அனைவரையும் சிந்திக்கச் செய்யக்கூடியதாகும்.

"It is a joyous day on which the world's children are honoured and a serious day on which the world's adults re-examine the social conditions affecting children and renew their determination to improve the welfare of the children", என்பதே அந்த விளக்கமாகும்.

## குழந்தைகள் பெருக்கம்

ஆதி முதல் குழந்தைகள் நலனில் அக்கறை காட்டி வரும் இந்தியா, ஐ.நா. மன்றம் 1979-ஆம் ஆண்டை அனைத்துலகக் குழந்தைகள் ஆண்டு என அறிவித்ததும், ஐ.நா.வின் அங்கமான குழந்தைகள் நல நிறுவனத்துக்கு (UNICEF) ரூ. 900,000/- ஐ. உலகிலேயே முதல் நாடாகக் கொடுத்து உதவியது. குழந்தைகள் ஆண்டையொட்டி பல்வேறு நடவடிக்கைகளை குழந்தைகள் நலத்திற்கெனமேற் கொண்டு வரும் இந்தியா, அரசியல் சட்டத்திலேயே குழந்தைகளுக்குத் தக்க பாதுகாப்பு அளித்துள்ளது. அரசியல் சட்டத்தின் 39 வது பிரிவு அத்தகைய பாதுகாப்பு அளிக்கிறது. தொழிற்சாலைகளிலும், சுரங்கங்களிலும் அதுபோன்ற பிற இடங்களிலும் 14 வயதுக்குக் குறைவான குழந்தைகளை வேலையில் அமர்த்தக் கூடாது என அரசியல் சட்டத்தின்24-வது பிரிவு கூறுகிறது. குழந்தைகள் 14 வயதடையும் வரை இலவசமாகவும், கட்டாயமாகவும் கல்வி அளிக்கவேண்டுமென அரசியல் சட்டத்தின் 45-வது பிரிவு கூறுகிறது. இத்தகைய பாதுகாப்புக்களை நல்கியுள்ள இந்திய அரசு அன்பும் அரவணைப்பும் உரிமைகளும் மறுக்கப்பட்ட குழந்தைகளைச் சென்றடைந்து அவர்கள் நலம் பேண— காக்க அனைத்தும் செய்வது என்ற கருத்தை அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டின் கொள்கையாகக் கொண்டுள்ளது. அதோடு 1979 முதல் - 1999 வரை, தொடர்ந்து செயல் பட்டு குழந்தைகள் நலத்திற்காக ஆவன எல்லாம் செய்ய வேண்டும் என அறிவித்துள்ளது இந்திய அரசு!

இந்தியா மக்கள் தொகையில், சீனாவிற்கு அடுத்த படியாக, உலகிலேயே இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. உலகில் உள்ள வளர்ச்சி பெற்று வரும் நாடுகளில் மிகக்குறைந்த வருவாய் உடைய நாடுகளாகப் பல இருக்கின்றன. அவற்றில் ஒன்றாக இந்தியா இருக்கிறது. ஆசியாவில் உள்ள சில நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்தியா மக்கள் தொகையால் பெரிய நாடு—வருமானம் குறைந்த நாடு என்பது புரியும். அதே நேரத்தில் குழந்தைகளின் எண்ணிக்கையும் இங்குதான் அதிகம். கி.பி. 2000-ல், 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இன்றைய மக்கள் தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்களாக இருப்பார்கள் என மதிப்பிட்டுள்ளார்கள். வேறு சில ஆசிய நாடுகளுடன் இந்தியாவை ஒப்பிட்டுப்பார்த்தால் நம் நாட்டின் நிலை விளங்கும். அதற்குக் கீழே தரப்பட்டுள்ள அட்டவணை துணை புரியும்.



| [illegible] | GNP Percapita (U.S.$ 1975) | மக்கள் தொகை 1975 (000) | கி.பி. 2000 (000) | குழந்தைகள் 1975 வயது 0-4 (000) | வயது 5-9 (000) | வயது 10-14 (000) | கி.பி. 2000 வயது 0-14 (000) | [illegible] 1000க்கு (1) வயது 0-14 (000) | 1970-1975 | 1995-2000 | [illegible] (000) 1975 | கி.பி. 2000 | [illegible] 1976 | [illegible] | [illegible] 1976 | [illegible] 1975 (000) | கி.பி. 2000 (000) | 1975 | 2000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| குவைத் | 15192 | 1005 | 3183 | 211 | 149 | 114 | 474 | 1412 | 47.1 | 36.3 | 47 | 116 | 67.2 | 44 | — | 3 | 7 | 2.6 | 2.2 |
| ஜப்பான் | 4448 | 111570 | 132929 | 10189 | 8891 | 8260 | 27340 | 26647 | 19.2 | 14.5 | 2123 | 1927 | 72.9 | 10 | 0.9 | 136 | 86 | 1.2 | 0.6 |
| இஸ்ரேல் | 3794 | 3469 | 5566 | 438 | 368 | 332 | 1137 | 1535 | 26.4 | 19.4 | 92 | 108 | 71.7 | — | — | 5 | 5 | 1.3 | 0.9 |
| சௌதி அரேபியா | 3705 | 8970 | 18600 | 1657 | 1287 | 1066 | 4010 | 7816 | 49.5 | 37.4 | 444 | 696 | 45.4 | — | — | 127 | 100 | 14.1 | 5.4 |
| சிங்கப்பூர் | 2446 | 2250 | 3127 | 222 | 234 | 280 | 737 | 733 | 21.2 | 14.9 | 48 | 47 | 70.0 | 12 | — | 8 | 6 | 3.5 | 1.8 |
| சீனா | 383 | 822800 | 1147987 | 98571 | 90960 | 85424 | 274954 | 290283 | 26.9 | 18.3 | 22133 | 21008 | 61.6 | — | — | — | — | — | — |
| தாய்லாந்து | 349 | 41870 | 85618 | 7680 | 6257 | 5309 | 19196 | 32604 | 43.4 | 29.1 | 1817 | 2491 | 58.0 | 68 | — | 1346 | 1213 | 32.1 | 14.2 |
| ஸ்ரீலங்கா | 187 | 13603 | 21339 | 1766 | 1878 | 1658 | 5303 | 5818 | 28.6 | 18.7 | 389 | 399 | 67.8 | 51 | 16.8 | 72 | 24 | 5.3 | 1.1 |
| பாகிஸ்தான் | 163 | 69229 | 146924 | 13031 | 10390 | 8795 | 32216 | 59716 | 47.4 | 32.5 | 3331 | 4775 | 49.8 | 113 | 7.5 | 1358 | 985 | 19.6 | 6.7 |
| இந்தியா | 141 | 608072 | 1059429 | 97756 | 83301 | 75105 | 256162 | 369183 | 39.9 | 26.2 | 24262 | 27863 | 49.5 | 130 | — | 15030 | 7856 | 24.7 | 7.4 |
| பர்மா | 110 | 30170 | 54902 | 4817 | 4053 | 3460 | 12331 | 20152 | 39.5 | 18.9 | 4182 | 1587 | 50.1 | 48 | — | 747 | 478 | 24.7 | 8·7 |

159883

## குழந்தைகள் நிலை

1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின் படி இந்தியாவிலுள்ள 14-வயதுக்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 230 மில்லியனாகும். இது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 42%. இதில் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை 115 மில்லியன். இந்தியாவில் பிறக்கும் 1000 குழந்தைகளில் 122 குழந்தைகள் இறந்து விடுகின்றன என்பதே, குழந்தைகள் நலத்தைப் பாதுகாக்க வேண்டிய நடவடிக்கைகளில் எவ்வளவு அக்கறை செலுத்த வேண்டியவர்களாக நாம் உள்ளோம் என்பதை விளக்கும். இந்தியாவில் உள்ள மொத்தக் குழந்தைகளில் 81 சதவிகிதத்தினரான 187 மில்லியன் குழந்தைகள், குழந்தைகள் சாவு விகிதம் 1000க்கு 131 ஆக இருக்கும் கிராமப் பகுதிகளில் வாழ்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும். 'கொடிது கொடிது இளமையில் வறுமை' என்பார்கள். அந்த வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள இந்தியக் குழந்தைகளின் எண்ணிக்கை 92 மில்லியன். இந்திய மக்கள் தொகையில் 40 சதவிகிதத்தினர் வறுமைக் கோட்டிற்கும் கீழே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வறுமை நிலையில் வாழும் இந்த அளவு பெரும்பாலான குழந்தைகள்தான் எதிர்கால இந்தியா? வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பவர்களிடையே 'சிறு குடும்பம்' காண்பதும் அரிதாக உள்ளது. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் சத்துணவுக் குறைபாடு காரணமாக இறக்கிறார்கள் என்றும், உலகம் முழுவதையும் எடுத்துக் கொண்டால் 40 விழுக்காடு அளவு குழந்தைகள் சாவு இந்நாடுகளில் ஏற்படுகின்றன என்றும் ஒரு புள்ளி விவரம் கூறுகிறது. இந்தியா, வளர்ச்சியடைந்து வரும் நாடுகளிலேயே பொருளாதாரத்தைப் பொறுத்த மட்டில் மிகப் பின் தங்கிய நிலையில் உள்ள நாடு என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

## தாய்-சேய் நலம்

தாய்-சேய் நலம் என எடுத்துக் கொண்டால், இதுவரை நாம் ஏற்படுத்தியுள்ள சாதனை மிகக் குறைவென்றும், சாதிக்க வேண்டியது அதிகம் என்றும், தாய்-சேய் நலத் திட்டங்களால் பயன் பெற வேண்டிய தாய்மார்கள், குழந்தைகள் ஆகியோரின் எண்ணிக்கை ஏராளமென்றும் இந்திய அரசே தெரிவித்துள்ளது. இந்தியாவிலுள்ள மொத்த மக்கள் தொகையில் 15 முதல் 45 வயதுக்குட்பட்ட தாய்மார்கள் 22 சதவிகிதத்தினராகவும், ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள் 21 சதவிகிதத்தினராகவும் உள்ளனர் என்றும், ஆக நல்வாழ்வு, சத்துணவுத் திட்டம், தாய்-சேய் நலத் திட்டங்களால் பயன் பெற வேண்டியவர்கள், இந்திய மக்கள் தொகையில் 43 சதவிகிதத்தினராக இருக்கிறார்கள் என்றும் அறிகிறோம். இதில் மிகக் குறைவான சதவிகிதத்தினரே இப்போது செயல் படுத்தப்பட்டு வரும் தாய்-சேய் நலத் திட்டங்களால் பயனடைந்து வருகிறார்கள் என அறியும் போது, இவ்வகையில் ஆற்ற வேண்டிய பணி ஏராளமிருக்கிறது என்பது புரிகிறது. இத்தகைய நிலையிலே இருக்கிற இந்தியக் குழந்தைகளின் நலம் பேணி, மேம்பாடடையச் செய்வதற்கு இந்தியாவில் எடுக்கப்பட்டு வரும் 'அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டு 1979' பெரும் பயனை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கொள்கையும் பாதுகாப்பும்

மொத்தத்தில் இந்நாட்டுக் குழந்தைகளின் வாழ்வில் ஒளியூட்டுவதற்காக, குழந்தைகள் ஆண்டையொட்டி இந்திய அரசால் பல நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. பொதுவாக நாட்டிலுள்ள குழந்தைகள் சாவு விகிதம், கருவுயிர்ப்புச் சாவு விகிதம் ஆகியவற்றைக் குறைக்க வேண்டும். தாய்மார்களின் சாவினையும் குறைக்க வேண்டும்

தாய்-சேய் திட்டங்களின் பயன், போதுமான அளவு, அனைத்துத் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் கிட்டும் என்ற உறுதிப் பாட்டை உருவாக்க வேண்டும். குழந்தைகள், கருவுற்ற தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கான அடிப்படை நல்வாழ்வு மருத்துவ வசதிகள் கிட்டும்படி செய்ய வேண்டும். சத்துணவுத் திட்டங்களை நிறைவேற்றிப் பயன் பெறச் செய்யவேண்டும். பொறுப்புள்ள, அறிவாற்றல் மிக்க பெற்றோர்களாக பையன்களையும், பெண்களையும் உருவாக்க வேண்டும். குடும்ப நலத் திட்டம் குறித்த முறையான விவரங்களை அறியச் செய்து பயன் படுத்துமாறு செய்ய வேண்டும். சமுதாயம் முழுமையிலும் நல்வாழ்வு, சத்துணவு, குடும்ப நலம், தாய்-சேய் நலம் போன்றவை குறித்து எடுத்துச் சொல்லி மக்களிடையே பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனக்கொள்கை வகுத்துக் கொண்டு, 'அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டு 1979', பணிகளைப் பல முனைகளிலும், குழந்தைகள் நல்வாழ்விற்கென இந்திய அரசு செயல் படுத்தி வருகிறது.

பிறந்தது முதல் வளர்ந்து வாலிபப் பருவம் அடையும்வரை குழந்தைகளுக்கு வரும் நோய்களைத் தடுப்பதற்கும், அதன் வழி குழந்தைகள் சாவு எண்ணிக்கையைக் குறைப்பதற்கும் தடுப்பு நடவடிக்கைகளும், அதற்கான திட்டங்களும் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. புதிதாகப் பிறந்த குழந்தைகளைக் காச நோயிலிருந்தும், தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல், இசிவு நோய் ஆகியவற்றிலிருந்தும், காப்பதற்காகத் தடுப்பு ஊசிகள் போடப்படவேண்டும். இதற்காகப் பரந்த அளவில் கிராமப் புறங்களில் முகாம்கள் நடத்த (Mass immunisation Campaigns) ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குழந்தைகள் நலனில் அக்கறை காட்டும் எல்லா அரசுத் துறைகளும், தன்னியக்க நிறுவனங்களைச் சார்ந்தோரும் இதில் பெரும் அளவில் பங்கு கொண்டு குழந்தைகளைப் பயன் பெறச் செய்ய வேண்டுமென இந்திய அரசு கூறியதோடு, அதற்கான உதவிகள் அனைத்தையும் செய்து உதவி வருகிறது. தாய்-சேய் நலத் திட்டங்கள் மிகுந்த முனைப்போடு செயல் படவும் உதவி வருகிறது. குழந்தைகள் நலம் காப்பதில் குடும்ப நலத் திட்டம் தலையான இடத்தைப் பெறுகிறது என்பதை மக்களுக்கு விளக்கி, குழந்தைகள் ஆண்டில் அனைவரும் 'சிறு குடும்ப நெறி' ஏற்குமாறு செய்ய நாடு முழுவதிலும் எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. அளவாகப் பெற்று வளமாக வாழும் குடும்பங்கள் குழந்தைகளுக்குத் தேவையானவற்றையெல்லாம் அளித்து, ஒளிமயமான எதிர் காலத்தை உருவாக்கித் தரும் என நம்பலாம். மேலும் சத்துணவுத் திட்டம், பள்ளி நல்வாழ்வுத் திட்டம், சுற்றுப்புறச் சுகாதாரச் சூழலை அமைத்துக் கொடுத்தல், தேவையான அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியை உருவாக்குதல், போன்றவற்றால் குழந்தைகள் நலனை ஓங்கச் செய்ய பணிகள் ஆற்றப்பட்டு வருகின்றன.

### கல்வி

நலம் காத்துக் குழந்தைகளை வாழச் செய்கிற அதே நேரத்தில்,

'கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவர்க்கு மாடல்ல மற்றயவை' என்ற குறளின் பொருளுணர்ந்து, அவர்களுக்கு. அடிப்படைக் கல்வி அளிக்கவும் ஆவன செய்யப்பட்டுள்ளது. பதினான்கு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாகவும், கட்டாயமாகவும் கல்வி அளிக்க ஏற்பாடுள்ளது என்ற போதிலும் அதில் முழுமையான வெற்றியை நாடு இன்னும் பெறவில்லை. 1982-83-ல் நம் நாட்டில், ஆறு முதல் பதினான்கு வயதுக்குட்பட்ட குழந்தைகள் 135 மில்லியன் பேர்கள் இருப்பார்கள் என மதிப்பிடப் பட்டுள்ளது. இப்போது ஆரம்பப் பள்ளிகளிலும், நடுநிலைப் பள்ளிகளிலும் 89.9 மில்லியன் குழந்தைகளே கல்வி பெறுகின்றனர். பள்ளி செல்லாதிருக்கும் குழந்தைகளில் பெரும் பகுதியினர் கிராமப் புறங்களைச் சார்ந்தவர்களாகவும், சமுதாயத்தின் வாய்ப்பு-வசதிகள் அந்த பகுதியினரைச் சேர்ந்தவர்களாகவுமே உள்ளனர். மலை வாழ் மக்களின் குழந்தைகள், பிற்பட்ட பகுதிகளில் வாழும் குழந்தைகள் ஆகியோரும் அடங்குவர். இவர்களுக்கெல்லாம் கல்வி அளிக்க இந்தியா அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளது. அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டு 1979 முதல் எட்டாம் வகுப்பு வரை இலவசக் கல்வி அளிக்க வேண்டுமென இந்திய அரசு கூறியுள்ளது. எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி கிட்டுவதற்கான வழியில் கல்வித் துறையில் பல முன்னேற்றங்களை இந்தக் குழந்தைகள் ஆண்டில் செய்து வருகிறது.

### சமூக நலம்

தாய்மார்கள் நலம், குழந்தைகள் நலம் காக்கப் படவேண்டுமானால் ஒட்டு மொத்தமான சமூக நலம் காக்கப் படவேண்டும். சமுதாயத்தில் உள்ள வெவ்வேறு விதமான மூட நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் மாற்றப்பட்டு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியாக வேண்டும். பெண்கள் சத்துணவு உண்பதே கூடாது என்ற நம்பிக்கையுடைய சமூகங்களும் உலகத்தில் இருக்கின்றன. குழந்தைகளுக்கும் அதே கதிதான். இந்நிலைகளையெல்லாம் மாற்றிட வேண்டும். பொதுவாகக் குழந்தைகள் நலம் பேணுவதோடு, ஊன முற்ற குழந்தைகள், அநாதைக் குழந்தைகள், பணிக்குச் செல்லும் மகளிரின் குழந்தைகள் ஆகியோரின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் இந்திய அரசு திட்டங்களை அறிவித்து குழந்தைகள் ஆண்டில் செயல் படுத்தி வருகிறது. நாடு முழுவதிலும் ஆறு வயதுக்குட்பட்ட 2 மில்லியன் குழந்தைகள் நகர்ப்புறங்களிலும், 16.6 மில்லியன் குழந்தைகள் கிராமப் புறங்களிலும் வாழ்கிறார்கள் என மதிப்பிடப் பட்டுள்ளது. இவர்கள் பணிக்குச் செல்லும் மகளிரின் குழந்தைகளாவர். இந்நாட்டில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான அநாதைக் குழந்தைகள் வாழ்வதாகவும் மதிப்பிடப் பட்டுள்ளது. இக்குழந்தைகளின் நலம் காப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை சமூக நலத்துறையின் மூலமும், வேறு துறைகளின் வாயிலாகவும் செயல் படுத்தி வருகிறது, இந்திய அரசு. குழந்தைப் பருவத்திலேயே வேலைக்குச் செல்லும் குழந்தைகள் ஏராளமாக இருந்த போதிலும், அந்நிலையை முழுமையாக ஒழிப்பதற்கான சட்டத்தை உருவாக்கும் தோது இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய குழந்தைகள் தான் நாளைய இந்தியா என்பதுணர்ந்து, குழந்தைகள் ஆண்டில், குழந்தைகள் நலம் காக்க இந்திய அரசு ஏராளமான திட்டங்களைச் செயல் படுத்தி வருகிறது. இத்திட்டங்களால் எல்லாக் குழந்தைகளும் பயன் பெற வேண்டுமானால், தாய்-சேய் நலம் காப்பதோடு, அனைத்து வழிகளிலும் பயன் தரத்தக்க குடும்ப நலத் திட்டத்தை பாகுபாடு எதுமின்றி நாட்டு மக்கள் அனைவரும் ஏற்றுச் செயல் படுத்தி அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.








# ஏன் இந்தப் பாடு?

கே.ஜி.இராதாமணாளன்

## காட்சி 10.

இடம் : சிதம்பரம் வீடு.

இருப்போர் : சிதம்பரம், பன்னீர், உமா:

[சிதம்பரமும் மகன் பன்னீரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.]

சித : அன்னிக்கி உன் மாமன் பேசினது.........

பன் : இப்ப நினைச்சாக்கூட, எனக்கு ஆத்திரம் பொங்கிக்கிட்டு வருது அப்பா! நாலு வார்த்தெ நீங்க சூடா கேட்டிட்டு வந்திருந்திங்கன்னா, நான் எவ்வளவோ மன ஆறுதல் அடைஞ்சிருப்பேன்!

சித : அவன் பேசினது இருக்கட்டும், பன்னீர்! அவன் எப்பவுமே கொஞ்சம் கோவக்காரன்—தடதட இன்னு வார்த்தைகளெ கொட்டிடுவான்! அதெ சொல்லலே நானு! அன்னிக்கு ஒரு வார்த்தெ சொன்னான்—அது அனுபவப் பேச்சு இன்றதெ, நான் இப்போ புரிஞ்சிகிட்டேன்!

பன் : எதைப் பத்தியப்பா சொல்றிங்க ?

சித : "நீங்க எத்தனையோ பேருக்கு உதவி செய்திருக்கிங்களே—அவங்க கிட்டபோயி பணத்தெ கேட்டுப் பாருங்களே!" இன்னு சொன்னான்!

பன் : அவர் சொன்னபடி . . . . . .

சித : செய்து பார்த்துட்டேன்! அப்படிப்பட்ட வங்க இரண்டு பேரைப் போய்ப் பார்த்தேன்! நல்ல வளமா இருக்கிறானுங்க—நான் பணமின்னு சொன்னதும், பஞ்சப்பாட்டுப் பாட ஆரம்பிச்சுட்டானுங்க! பண நெருக்கடிதான், கூடப் பழகறவங்களைத் தெரிஞ்சிக்கிற உரை கல்லாக இருக்குது!

பன் : உங்க தகுதி என்ன—நீங்க போயி மற்றவங்கக் கிட்ட பணம் கேட்கிறதா? மாமா கிட்ட கேட்கறோம்—வாங்கறோம்—தர்ரோம்—அது வேற! மற்றவங்கக் கிட்ட கேட்கலாமா? கடன் கேட்க வர்ரோமின்னு தெரிஞ்சா—நம்மெ வான்னு யாரப்பா வரவேற்பாங்க?

சித : என்னப்பா செய்யறது—உன் மாமனோ போயி நின்னதும், எடுத்தேன் கவிழ்த்தேன்னு பேசிட்டான்! உன் காலேஜுக்கோ பணம் கட்டியாகணும் —நாளோ இல்லே—இன்னும் ரெண்டு நாளிலே—கட்டலேன்னா, பரீட்சை நீ எழுத முடியாதே!

பன் : முடியாட்டி போகுதப்பா—நீங்க மனசெ போட்டுக் குழப்பிக்காதிங்க!

[உமா உள்ளே வந்து கொண்டே...............]

உமா : எதை முடியாட்டி போகுதுன்னு அத்தான் சொல்றாரு?

பன் : (வெறுப்போடு) வந்துட்டையா—எங்க வேதனையைப் பார்த்துச் சந்தோஷப்பட?

சித : வாம்மா உமா!

உமா ; அத்தானுக்கு ஏன் இவ்வளவு வெறுப்பா இருக்கு, என்னெ பார்க்கச்சே எல்லாம்!

சித : அவன் கிடக்கிறான், விடம்மா!

உமா : நான் என்ன செய்தேன்னு, அத்தானுக்கு என்னெ கண்டா பிடிக்கலே?

பன் : உன்னைப் பார்த்தா—உங்க அப்பாவெ பார்க்கறாப்பலே இருக்கு எனக்கு!

உமா : இருங்க அத்தான்—ஒரு பேச்சுக்குத்தான் கேட்கறேன்—எங்க அப்பா, உங்களுக்கு என்ன கெடுதி செய்தாரு?

பன் : அதெ ஒவ்வொன்னா சொல்லணுமா?

உமா : சொல்லுங்களேன்—கேட்கறேன்! எனக்கும் தெரியணுமில்லையா? மாமா கேட்கச்சே எல்லாம் பணம் கொடுப்பாரு—அந்தத் தப்பே தவிர, எங்க அப்பா வேறென்ன செய்தாரு, சொல்லுங்க?

பன் : பணம் கொடுக்கறாரு—சீதக்காதி வள்ளல்! சும்மா ஒன்னும் கொடுத்துடலே, வட்டிக்குத்தான் கொடுக்கறாரு—அதுவும் எல்லாத்தையும் எழுதி வாங்கிக் கிட்டு!.......... நாங்க இன்னா அவருக்குக் கிள்ளுகீரை! அலட்சியமா நடத்தறது—அவமதிப்பா பேசறது—உமா, காலம் மாறத்தான் போகுது! முன்னாலே போற ஊஞ்சல், பின்னாலே வந்துதான் தீரனும்!

சித : (அதட்டும் குரலில்) பன்னீர்! சும்மா இருடா! அப்பனெ எதிர்த்துப் பேச நமக்கு வக்கில்லே—மகள் கிட்ட காட்டறான், வீரத்தெ!

பன் : வீரத்தெ காட்ட இன்னும் காலமிருக்கு, அப்பா!

உமா : உங்களுக்கு வர்ர அந்தக் காலம், எங்க அப்பா மனசெ மாத்தினாலும் மாத்திடும்!

பன் : 'பழநிமலை இடம் பெயர்ந்து சென்னைக்கு வந்து விடுமின்னு சொல்—நம்புகிறேன்! உன் அப்பா குணம் திருந்திடுமின்னு மட்டும் சொல்லாதே, என்னாலே நம்பமுடியாது!

சித : பன்னீர் சொல்றதெ நானும் ஒத்துக்கிறேன், உமா! எவ்வளவு நல்லவங்களோடப் பழகினாலும், எத்தனை புத்தகங்கத்தான் உன் அப்பன் படிச்சாலும்—அவன் குணம் மாறுமின்ற நம்பிக்கை எனக்கும் இல்லேம்மா! எந்த நிறத்தோட சேர்ந்தாலும், கறுப்பு நிறம் மாறதில்லே! கறுப்பு, கறுப்பாகத்தான் இருக்கும்!

பன் : நீங்க இருங்க அப்பா—பரீட்சை முடியட்டும் அவரெ நான் பார்த்துக்கிறேன்!

சித : (சோகமாக) பரீட்சை முடியட்டுமா—நீ எங்கிருந்து பரீட்சை எழுதப்போறே?

உமா : ஏன் மாமா அப்படிச் சொல்றிங்க? அத்தான் ஏன் பரீட்சை எழுத முடியாது?

சித : எப்படியம்மா எழுத முடியும்—காலேஜுக்குக் கட்ட வேண்டிய பணத்தெ கட்டினாதானே, பரீட்சை எழுத விடுவாங்க?

உமா : அன்னிக்கு எங்க வீட்டுக்கு நீங்க வந்துட்டுப் போனிங்களே—அன்னக்கே கணக்குப் பிள்ளெ சொன்னாரு...........

சித : என்னம்மா சொன்னா, அன்னக்கி ஒன்னும் உன் அப்பனை நான் பணம் கேட்கலையே?

உமா : கேட்கவிடாமே—அப்பா கோவமா பேசி, உங்களெ அனுப்பிட்டாறாமே! ........... சரி, மாமா! அத்தானுக்குக் கட்ட இப்போ எவ்வளவு பணம் வேணும்?

பன் : அதைப்பத்தி உனக்கென்ன, அக்கறை?

உமா : நீங்க சும்மா இருங்க—மாமா செல்லட்டும்!

சித : எங்கெங்கோ கேட்டுப் பார்த்துட்டேன், புரட்ட முடியலே! என்ன செய்யறது?

உமா : எவ்வளவு ரூபா தேவைப்படுமின்னு கேட்டனே, மாமா!

சித : உன் அப்பாகிட்ட சிபார்சு பண்ணி, வாங்கித் தர்ரேன்னு சொல்றையா?

உமா : அப்பாகிட்ட சிபார்சு எதுக்கு? முடிஞ்சா நானே தர்ரேன்!

சித : உன்கிட்ட ஏதம்மா பணம்?

உமா : எனக்கு அப்பா செலவுக்குத் தர்ர பணத்திலே, மாதா மாதம் தபால் ஆபீஸ் சிறு சேமிப்பிலே இருபது ரூபா போட்டுக்கிட்டு வந்தேன்! ஐந்து வருஷம் முடிஞ்சிபோச்சி! கணக்குப் பிள்ளை நீங்க வந்துட்டுப் போனதெ சொன்னப்போ, உங்களுக்குக் கொஞ்சம் பணமுடையின்னு தெரிஞ்சிகிட்டேன்! நேத்து தபால் ஆபீசுக்குப் போயி, அந்தச் சேமிப்புப் பணத்தெ வாங்கி வந்தேன்! சிறு சேமிப்பிலே நான் சேர்த்த பணம், இந்தாங்க மாமா! போதுமாயின்னு சொல்லுங்க! இன்னொரு சேமிப்புக் கணக்கிலே பணம் கட்டிக்கிட்டு வர்ரேன்—அவசியமானா அதிலே கடன் கூட வாங்கிக் கொள்ளலாம்!

[அவள் இடையில் சொருகி வைத்திருந்த ஒரு காகித உறையை எடுத்து, அதைச் சிதம்பரத்திடம் கொடுக்கிறாள். சிதம்பரம் அதை வாங்கிக் கொண்டு...............]

சித : எவ்வளவு அம்மா, இதிலே இருக்கு?

உமா : மாதம் ரூ. 20 கட்டினது—ஐந்து வருஷத்திலே கட்டின பணத்துக்கு வட்டிப்போட்டு— ரூ. 1520 கொடுத்திருக்கிறாங்க!

சித : எனக்கு எதுக்கம்மா இவ்வளவு பணம்? ஐந்நூறு ரூபா இருந்தா போதும்! மீதத்தெ நீ எடுத்துக் கிட்டுப் போம்மா!

[அவர் உறையைத் திறக்கிறார்.]

உமா : மீதமும் உங்கக் கிட்டவெ இருக்கட்டும் மாமா, எனக்குச் செலவு வந்தா வாங்கிக்கிறேன்?

[அவள் புறப்படும்போது...........]

பன் : நில்லு, உமா!

உமா : எதுக்கு?

பன் : பணம் கொடுத்துட்டுச் சும்மா போறையே?

உமா : இருந்து சாப்பிட்டுப் போகச் சொல்றிங்களா?

பன் : அந்த வாய் உபசாரமெல்லாம் எனக்குப் பிடிக்காது!

உமா : பின்ன எதுக்கு நிக்கச் சொல்றிங்க?

பன் : பணம் கொடுத்தையே—உங்க அப்பா எழுதி வாங்கறாப்பலே, நீயும் எழுதிவாங்கிட்டுப்போ!

உமா : ஏற்கனவே எழுதி வாங்கியாச்சி--மாமாவோட இதயத்தெ!

[அவள் சிரித்துக் கொண்டே அங்கிருந்து செல்கிறாள்]

—காட்சி முடிகிறது—

(வளரும்)

159883



Printed and Published by S. GNANADESIKAN, M.D. Director of Medical Services and Family Welfare [Incharge]
at No. 49, Pantheon Road, Madras 600 008 — State Family Welfar[illegible] Salai, Madras-600006
Editor: K. G. RADHAMANALAN Assistan[illegible] INGAM

## Why an International Year of the Child?

For one and a half billion reasons—most of them under ten years old.

Because all children have special needs—but in many cases these needs are not being adequately met.

Because children are our future—and our most precious resource. The quality of tomorrow's world—perhaps even its survival—will be determined by the well-being, safety and development of children today.

Because children are wholly dependent upon adults—and we owe them the best we have to give.



## What is IYC?

An opportunity to focus on children, and put them in their proper place: at the centre of world concern.

The twentieth anniversary of the United Nations Declaration of the Rights of the Child: a time to recall its principles and redouble our efforts to put them into practice.

A year supported by all members of the United Nations to promote lasting action to improve the lives of children everywhere.

A time for governments, organizations and individuals to work together in concrete, constructive, practical programmes for the benefit of children.



## What Can I Do?

Look around. Listen. Learn. And act.

What are the main needs of children in your neighborhood? Your town? Your country? The world beyond?

What are your own major interests? Special skills and opportunities?

Talk to friends and neighbors about IYC. Start a discussion group. Write to editors, try to influence legislators in defence of children and their rights. Help to raise funds for better services for children at home, and if possible, abroad. Offer your time and talents.

Care. And get involved.

To get more information, write to the address on the back.



UN Declaration of the Rights Of The Child

THE RIGHT

- to affection, love, and understanding.
- to adequate nutrition and medical care.
- to free education.
- to full opportunity for play and recreation.
- to a name and nationality.
- to special care, if handicapped.
- to be among the first to receive relief in times of disaster.
- to learn to be a useful member of societ and to develop individual abilities.
- to be brought up in a spirit of peace and universal brotherhood.
- to enjoy these rights, regardless of race, color, sex, religion, national, or social c

For further information on IYC contact:

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

# International Ye of the Child 197

The United Nations invites you to renew your concern for children everywhere . . .